# ஆயகலை

Aayakalai

பங்குனி, சித்திரை 2021



அருந்தமிழ்க் கலை வளர்க்கும் இரு திங்கள் ஏடு

தவத்திரு [illegible] சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைத்துறையின் காவிய நாயகன் அருட்கலாநிதி, பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் 01.04.2021 அன்று இறைவனோடு இன்புறச் சென்றார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலை

அருந்தமிழ்க் கலை வளர்க்கும் இரு திங்கள் ஏடு

இதழ் 2 பங்குனி,சித்திரை 2021

ஆசிரியர்

**வசாவிளான் தவமைந்தன்**

ஆலோசனைக் குழாஅம்

**முனைவர் அரிமளம் சு.பத்மநாபன்,**
முன்னை ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, தமிழ்நாடு.

**பண்டிதர் ந.கடம்பேசுவரன்,**
வருகைதரு விரிவுரையாளர், தமிழ்த் துறை, யாழ்.பல்கலைக் கழகம். இலங்கை.

கைபேசி
0778707078

மின்னஞ்சல்
aayakalai2021@gmail.com

- வெளியீடு -
**குரலோசை**
**நுண்கலைகளின் தாயகம், 4/7, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்**

[redacted]

*விலை - ரூபா 100.00*


## இதழின் உள்ளே....


ஆசிரியர் எண்ணம்

***கலை தந்த காவியங்கள்***
தவத்திரு யோக சுவாமிகள் நினைவுக் கட்டுரை
வசாவிளான் தவமைந்தன்

***தவத்திரு யோக சுவாமிகள் அருளிய காப்பும் பொருளும்***
யோகி

***ஆசானைக் கண்டேன்***
யோக சுவாமிகள் நேரிசை வெண்பா

***சங்கீதபூசணம் கணபதிப்பிள்ளை***
வசாவிளான தவமைந்தன்

***இதழ்கள் சங்கம், நாடகங்கள்*** (செய்தி)

***பரத அரங்கேற்றங்கள்*** (செய்தி)

***நாடக அரங்கக் கல்லூரி***
க.ஞானபாஸ்கரன்

***ஆழப் பதிந்த சுவடுகள்***
இரா.தனராஜ்

***உலகத் தாய் மொழி தினம்***
பேராசிரியர் சி.மௌனகுரு

***தாய்மொழி தினம், பரத அரங்கேற்றம்*** (செய்தி)

***முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்***
வண.செ.அன்புராசா

***உலக நாடக தினம் 2021***
க.சீலன்

***கலை நிகழ்வுகள், உலக நாடக தினம்*** (செய்திகள்)

***அமுத விழா, நூல், சஞ்சிகை வெளியீடு*** (செய்திகள்)



இதழ் வடிவமைப்பு - **த.றொபேட்**
அட்டைப்பட ஓவியம், வடிவமைப்பு - **த.தஜேந்திரன்**
அச்சுப் பதிப்பு - **ஜே.எஸ்.பதிப்பகம், பண்டைத்தரிப்பு, யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில்.

21.02.2021 அன்று உலகத் தாய் மொழி தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் ஈழத்திலும் தமிழர்கள் இத்தினத்தைக் கொண்டாடினார்கள். பலர் சமூக வலைத் தளங்களில் தாய் மொழி தினத்தை முன்னிட்டுத் தமது தாய் மொழிப் பற்றை உணர்ச்சி பொங்க வெளிப்படுத்தினர். ஊடகங்களும் தமது பங்களிப்பை நிகழ்த்தி முடித்தன.

இதை விட நாட்டின் பல பகுதிகளிலும் முத்தமிழ் விழாக்கள், தமிழ் விழாக்கள், தமிழ் மொழித்தினப் போட்டிகள், தமிழ் மொழிப் போட்டிகள், திருக்குறள் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கவி அரங்குகள், தமிழ் நாடகப் போட்டிகள், திருமுறைப் பாடல் போட்டிகள் எனப் பல்வேறு வகையான நிகழ்வுகள் தமிழ் மொழியை அடிப்படையாக வைத்து நிகழ்த்தப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கான ஆய்வு மாநாடுகளும் உலகெங்கும் நிகழ்த்தப்படுகின்றன.

தமிழ் மொழியை வளர்ப்பதற்காகவும் அதன் சிறப்பை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவுமே இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதாக அதன் ஏற்பாட்டாளர்கள் கூறிக் கொள்கின்றனர். பல கோடி ரூபா செலவில், அதாவது தமிழர்களின் பணத்தில் இவை நிகழ்த்தப்படுகின்றன. ஆனால் உண்மையான தமிழர்களாகவோ தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் மதிக்கும் குணமுடையவர்களாகவோ தமிழர்கள் வாழத் தவறி விட்டனர்.

குறிப்பாகப் படித்தவர்ளே தமிழ் மொழியின் சீரழிப்பாளர்களாக உருவெடுத்துள்ளனர். சந்திப்புக்களை ஆங்கிலத்தில் நிகழ்த்துவதிலும் கடிதங்களை ஆங்கிலத்தில் அனுப்புவதிலும் சாதாரண உரையாடல்களைக் கூட ஆங்கிலத்தில் நிகழ்த்துவதிலும் பெருமையடைகின்றனர், பேரானந்தமடைகின்றனர். இவர்களில் பலர் இரவல் ஆங்கிலத்தை வைத்தே வெள்ளைக்கார வேடம் புனைந்து கொள்கின்றனர்.

அத்துடன் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுவது அரிதான ஒன்றாக மாறி விட்டது. அவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் காட்டும் அக்கறையை தமிழ் கற்பித்தலிலோ தாய் மொழி விருத்தியிலோ காட்டுவதில்லை. பெரு வளர்ச்சி பெற்று வரும் ஆங்கில வழிக் கல்வி, தமிழ் மாணவர்களை அந்நியப் பண்பாட்டின் பிள்ளைகளாகவே மாற்றி விடும் என்பதைத் தமிழ்ப் பெற்றோர்கள் உணரத் தவறியுள்ளனர். முன் பள்ளிகளிலும் அதன் பின்னரான ஏனைய பள்ளிக்கூடங்களிலும் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் ஊடகங்களும் தமிழ்த் திரைப்படங்களும் தமிழ் மொழியைத் திட்டமிட்டு அழித்து வருகின்றன.

அனைத்து வழிகளிலும் செம்மொழியாகிய தமிழ் மொழியை புறக்கணித்து வரும் தமிழர்களில் அதிகமானோர் கையெழுத்திடுவதும் பிற மொழியில் தான். ஒரு தமிழன் தனது தாய் மொழிக்குக் கொடுக்கும் அதி உச்ச மரியாதை என்பது தமிழில் கையொப்பம் இடுவதாக மட்டும் தான் இருக்க முடியும். பிற மொழியில் கையெழுத்திட்டும் உரையாடியும் கல்வி கற்றும் பெருமைப்படுகின்ற தமிழர்கள் தாய் மொழி தினத்தைக் கொண்டாடத் தகைமை அற்றவர்களே. உரிமையும் அற்றவர்களே.

அன்புடன்....
வசாவிளான் தவமைந்தன்,
ஆசிரியர்,
ஆயகலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை தந்த காவியங்கள் - 2

**தவத்திரு யோக சுவாமிகளின் வரலாறு, கலை தந்த காவியங்கள் என்னும் தொடரின் இரண்டாவது கட்டுரையாக இடம் பெறுகின்றது**

**அது அப்படித்தான்...**
**அது எப்பவோ முடிந்த காரியம்...**
**ஒரு பொல்லாப்பும் இல்லை...**
**முழுதும் உண்மை...**
**இது அருமையான உலகம்...**
**ஆன்மா அழியாது....**



போன்ற பல விதமான தத்துவ, ஆன்மீகப் பொன் மொழிகளைத் தனது குருநாதரைப் பணிந்து எமக்கு ஈந்தவர் தவத்திரு சிவயோக சுவாமிகள். இறைவனை அடைவதற்கு மிகச் சிறந்த சாதனம் இசை என்பதையும் தனது "நற்சிந்தனை" என்னும் பாடல் தொகுப்பின் ஊடாக வெளிப்படுத்தியவர். தமிழ் உலகம் வியந்து போற்றி வணங்கும் ஒருவராகத் தவத்திரு யோக சுவாமிகள் விளங்குகின்றார்.

1872ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29ஆம் திகதி அம்பலவாணர், சின்னாச்சி தம்பதியரின் மானாக யோக சுவாமிகள் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் யோகநாதன். இவரது குடும்பம் யாழ்.கொழும்புத் துறையில் வாழ்ந்து வந்த காலத்தில் கொழும்புத் துறையில் இயங்கி வந்த கத்தோலிக்கப் பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வியைக் கற்றார். அதன் பின்னர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

தனது தாயாருடன் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு சென்று வீதி வலம் வருவதிலும் அங்கு வரும் மெய்யடியார்களைக் கண்டு களிப்பதிலும் பேரானந்தம் அடைந்தார். நல்லைக் கந்தன் திருவிழாக் காலத்தை மிகுந்த பற்றோடும் பரவசத்தோடும் நல்லைப் பதியில் கழித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர் இவரது தந்தையார் மஸ்கெலியாவிற்குத் தன்னுடன் அழைத்துச் சென்றார். தனது தொழிலைத் தனது மகன் யோகநாதன் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அம்பலவாணரின் விருப்பமாக இருந்தது. ஆனால் இயற்கை அழகை ரசிப்பதிலும் இயற்கையின் அற்புதத்தில் தன்னைப் பறிகொடுப்பதிலும் தனது நேரத்தைக் கழித்து வந்தார் யோகநாதன்.

தனது வியாபாரத் தொழிலுக்கு யோகநாதன் பொருத்தமற்றவர் என்பதை உணர்ந்த அவரது தந்தையார் தனது மகனை மீண்டும் கொழும்புத்துறைக்கு அனுப்பி வைத்தார். அதன் பின்னர் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியகக் காப்பாளராக அரச பணியில் இணைந்து, கிளிநொச்சி இரணைமடுக் குளத்திட்டத்தில் வேலைக் கருவிக் களஞ்சியப் பாதுகாவலராகப் பணியேற்றுக் கொண்டார்.

மனித சஞ்சாரம் குறைந்த இடமாகவும் அழகான இயற்கை வளம் பொருந்திய சூழல் கொண்டதாகவும் இப்பகுதி விளங்கியமையால் யோகநாதன் அவர்கள் இக்காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்தார். அத்துடன் இக்காலத்தில் ஆன்மீக நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும் பிறசமய நூல்களான புனித வேதாகமம், புனித குர்ஆன் போன்றவற்றையும் கற்று அனைத்தையும் மனனம் செய்து கொண்டார்.

கிடைக்கும் சம்பளத்தை ஆலயத் தேவைகளுக்கும் உறவினர், நண்பர்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து வந்தார். இக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுவாமி விவேகாநந்தரின் வரவேற்பு ஊர்வலத்திலும் நிகழ்விலும் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்.

அதிகமான ஆன்மீக நாட்டமும் ஒழுக்கமும் தனித்து வாழ்ந்த தூய வாழ்க்கை முறையையும் கண்ணுற்ற யோகநாதன் அவர்களின் மேலதிகாரியான வெள்ளைக் காரன் இவரைத் "தெய்வீக மனிதர்" என்று அழைத்து வந்தார்.



இன்று நாம் வணங்கும் யோக சுவாமிகளின் குருவாக அமைந்தவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் குருவாக இருப்பவர் கடையிற் சுவாமிகள். செல்லப்பா சுவாமிகள் நல்லூர் முருகனின் தேரடியில் பித்தரைப் போன்று வாழ்ந்து வந்தார். ஆனாலும் இவர் ஒரு ஞானியர் என்பதை உணர்ந்த பலர் அவரைத் தரிசித்து வணங்கி வந்தனர்.

1905 இல் இளையவனாக இருந்த யோகநாதன், சில பெரியவர்களுடன் செல்லப்பா சுவாமிகளைத் தரிசிக்க ஒருநாள் வந்தார். யோகநாதனைக் கண்ட செல்லப்பா சுவாமிகள் "யாரடா நீ" என்று உரத்த குரலில் அதட்டி விட்டார்.

நாத ஒலியாக வந்த அந்த மொழி ஞான மொழி என்பதை யோகநாதன் உணர்ந்து கொண்டார். " நல்லதப்பா வா, உன்னைப் போன்ற ஆளைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று யோகநாதனைப் பார்த்து செல்லப்பா சுவாமிகள் பின்னர் கூறினார்.

செல்லப்பா சுவாமிகளை வழிபட்டுச் சென்ற யோகநாதன் கிளிநொச்சியில் தனது பணியைத் தொடர்ந்த போதும் நல்லூரான் வீதியில் கிடைத்த செல்லப்பா சுவாமிகளின் தரிசனத்தில் இருந்து விடுபட முடியாதவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கொழும்புத் துறைக்கு வருவதும் செல்லப்பா சுவாமிகளைத் தரிசிப்பதும் இவருக்கு விருப்பமான செயலாக மாறி விட்டது. செல்லப்பா சுவாமிகளின் தொண்டனாக மாறிய யோகநாதன் தனது குருநாதரின் உபதேசங்களை மனதில் இருத்தித் தியான, யோக நிலையடைந்து கிளிநொச்சிக் காட்டில் ஆச்சிரம வாழ்வை வாழ்ந்து தன்னைத் தானே உணரத் தொடங்கினார்.

தன்னுள் உறங்கிக் கிடந்த ஞான நிலையை "யாரடா நீ" என்னும் மந்திரம் தெளிவு பெறச் செய்ததாகக் கருதிய யோகநாதன் தனது அரச பணியைத் துறந்து உறவு, சுற்றம் அனைத்தையும் மறந்து செல்லப்ப சுவாமிகளின் பாதத்தில் நிரந்த சீடராகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

"ஆன்மா அழியாது" எனும் ஞான தத்துவத்தைச் செல்லப்ப சுவாமிகளின் உபதேசங்களாலும் செயற்பாடுகளாலும் உணர்ந்து கொண்ட யோகநாதன் தனது குருநாதரின் கட்டளையை ஏற்று நல்லைக் கந்தன் தேரடியில் தவக்கோலம் பூண்டு தவவாழ்வு வாழத் தொடங்கினார்.

நாற்பது நாட்கள் தவமியற்றிய பின்னர் குருநாதரின் கட்டளைப்படி கதிர்காமயாத்திரை மேற்கொண்டார். கதிர்காமத்தில் இருந்து கொழும்பிற்குச் சென்று அதன் பின்னர் மலைநாட்டிற்குச் சென்று மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்தார். அதன் பின்னரும் செல்லப்ப சுவாமிகளோடு ஞான உறவு பூண்டு சிவஞான தீட்சை பெற்றுச் தவயோகச் செல்வராகி சிவயோக சுவாமிகளாக உயர்வு கண்டார்.

"எங்காவது வேரை விராயைப் பார்" என்ற செல்லப்ப சுவாமிகளின் பொன் மொழியை ஏற்றுக் கொழும்புத்துறைச் சந்தியில் நின்றிருந்த இலுப்பை மர வேரில் ஞானியாக அமர்ந்திருந்து திருமுறைப் பாடல்களைத் தனது உயர்ந்த, இனிய குரலிலே பண்ணிலக்கணம் தவறாது பாடித் தியானத்தில் மூழ்கித் திளைத்தார். செல்லப்ப சுவாமிகளின் நினைவாகவே அவர் முன்னர் தங்கியிருந்த இந்த மரத்தடியைத் தேர்ந்தெடுத்தார் சிவயோக சுவாமிகள்.

அதன் பின்னரும் செல்லப்ப சுவாமிகள் யோக சுவாமிகளைத் தேடி இலுப்பை மரத்தடிக்கு வந்து அருள் வாக்களித்துச் சென்றார். சில காலத்தின் பின்னர் செல்லப்ப சுவாமிகள் தனது இருப்பிடத்தில் சுகவீனமுற்றுக் கிடந்தார். அவரை யோக சுவாமிகள் பார்த்துவரச் சென்றார். படலையை அடைந்த போது "யாரடா படலையிலே" என்று சிம்மகர்ஜனை புரிந்து "பாரடா வெளியில் நின்று" என ஞான வாசகத்தை மீண்டும் மொழிந்தார். யாரடா நீ என்று முன்னர் அதட்டியது போன்று இந்நிகழ்வும் பேரருள் நிகழ்வாக அமைந்தது. யோக சுவாமிகள் தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார். "இன்று இரவு இங்கு பெரும் புதினம் நடக்கும், நீ வருவையோ" எனத் தன்னுடன் இரவிலே தங்கும் ஒருவரிடம் கேட்ட செல்லப்பா சுவாமிகள் அன்று இரவு சிவனுடன் கலந்தார். **1911** இல் செல்லப்பா சுவாமிகள் மறைந்தார்.

## கொழும்புத்துறையில் யோக சுவாமிகள்

"மர நிழலும் அன்பருள்ளமுமே எமக்கு உகப்பான உறைவிடங்கள்" என்று கூறிக்கொள்ளும் யோக சுவாமிகள் நீண்ட காலம் கொழும்புத்துறை இலுப்பை மரத்தடியில் தனது காலத்தைக் கழித்து வந்தார். அதன் பின்னர் அந்த இலுப்பை மரத்திற்குத் தென் கிழக்குப் பக்கமாக இருந்த சிறு குடில் ஒன்றில் நிரந்தரமாக அமரந்து கொண்டார். செல்லப்ப சுவாமிகள் சகல சம்பத்துக்களையும் யோக சுவாமிகளுக்கு வழங்கியுள்ளார் என்பதை நன்குணர்ந்த அடியவர்கள் யோக சுவாமிகளையும் அதே மரியாதையோடு அணுகத் தலைப்பட்டனர். அவர் தங்கியிருந்த குடில் ஆச்சிரமமாக மாறியது. திருமுறைப் பாடல்களும் போற்றிப் பாடல்களும் அங்கே ஒலிக்கத் தொடங்கின. பெரும் ஆன்மீகத் தலமாக அவ்விடம் புனிதமடைந்தது.

இலுப்பை மரத்தடியில் அமர்ந்திருந்த காலத்தில் பித்தர் போன்றும் மூர்க்கர் போன்றும் மக்களால் பார்க்கப்பட்டவர் பின்னர் அருள் ஞானியாகக் காட்சியளிக்கத் தொடங்கினார். பல இடங்களுக்கும் சென்றுவரத் தொடங்கினார். அறிஞர் பலர் கூடும் இடங்களில் தோன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான உரை நிகழ்த்தி வந்தார். அவரது எளிமையும் ஞான நிலையும் அனைவரையும் கவர்ந்தன. அவரைத் தரிசிப்பது பலருக்கு ஆன்ம சுகத்தைக் கொடுத்தது.

**ஆச்சிரமமாக மாறிய சிறு குடில்**

அக்காலத்தில் புகழ் பெற்ற அரசியல்த் தலைவர் முதல் தமிழிலக்கிய மேதைகள், ஏழை, எளியவர் என அனைத்து நிலையினரும் அவரது ஆச்சிரமத்தில் ஒன்று கூடத் தொடங்கினர். வித்துவான் கணேசையர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் முதலான தமிழ்ப் புலவர்கள் யோக சுவாமிகளைப் பணிந்து நின்றனர். சுவாமிகளின் வேண்டுதலை ஏற்ற சோமசுந்தரப் புலவர் நல்லூர் முருகன் மீது திருப்புகழ் பாடினார். நாத்திகர்கள், குடிப்பழக்கமுடையோர் போன்றவர்களும் சுவாமிகளின் ஆசி பெற்று நல்ல வண்ணம் வாழத் தலைப்பட்டனர். பிற சமயத்தவரும் சுவாமிகளைப் பணிந்து நின்றனர்.

ஈழத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் கொழும்புத் துறை ஆச்சிரமத்திற்கு அன்பர்கள் வரத் தொடங்கினர். எனினும் யோக சுவாமிகளை வணங்கும் அடியவர்களின் இல்லங்களுக்குத் தாமாகவே எழுந்தருளி ஆசி வழங்கியும் வந்துள்ளார். பல இடங்களில் முக்கியமான தருணங்களில் எவரும் எதிர்பாராத நேரங்களிலும் திடீரெனத் தோன்றி அருள் பாலித்து அடியவர்களைத் திகைப்படையச் செய்துள்ளார்.

1942ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் தனது ஆச்சிரமத்தில் மட்டுமல்லாமல் ஈழத்தின் பல பகுதிகளுக்கும் சென்று ஞான மழை பொழிந்து வந்தார். 1940இல் இந்தியாவிற்குச் சென்று திருவண்ணாமலையில் இரமண முனிவரைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது.

யோக சுவாமிளின் பெயர், ஈழம் முழுவதும் பரவியது. அவரை வழிபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் சென்றது. தன்னை நாடி வரும் அடியவர்களின் துன்பங்களைக் களைகின்ற ஞானியராகவும் அனைவருக்கும் நல்வழி காட்டும் ஆன்மீகக் குருவாகவும் தீயவர்கள் பலரைத் திருத்திய யோகியாகவும் யோக சுவாமிகளின் சிவமயமான பணி விரிந்து சென்றது. சிவ தொண்டு புரிவதிலேயே பூரணமாகச் செயற்பட்டு வந்த சுவாமிகள் காலத்திலேயே 1934 மார்கழி மாதம் "சிவதொண்டன்" எனும் ஏடு தொடங்கப்பட்டது.

1949ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து ஈழத்திற்கு நடனக் குழுவுடன் வந்த வெள்ளைக்கார 22 வயது இளைஞன் சுவாமிகளைக் கண்டு அருள் பெற்று சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் தீட்சா நாமத்தைப் பெற்றுக் கொண்டார். அவர் சுவாமிகளிடம் விடை பெற்ற போது சுப்பிரமுனியின் முதுகிலே ஓங்கி அடித்து இந்த ஒலி அமெரிக்காவிலே கேட்கும், உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ஜிப்பாய், நீ பல ஆலயங்களை அமைப்பாய் ,பலருக்கு உணவளிப்பாய் என்று ஆசி வழங்கினார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் முதலாவது ஆச்சிரமத்தை அமெரிக்கா சன்பிரான்ஸ்சிக்கோ நகரத்தில் அமைத்ததுடன் முருகன் ஆலயத்தையும் அமைத்தார். மேலை நாடுகளில் முதல் முதலாக அமைக்கப்பட்ட சைவாலயம் இதுவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாலயத்தில் யோக சுவாமிகளின் திருவுருவச் சிலையும் படமும் இன்று வரை காட்சியளிக்கின்றன. சுப்பிரமுனி சுவாமிகளின் சீடனாக (பிறப்பில் ஆங்கிலேயரான) வேலன் சுவாமிகள் விளங்குகின்றார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரசியல் யாப்பினை உருவாக்கிய சோல்பெரிப் பிரபுவின் மகன் சாந்த சுவாமிகள் எனும் தீட்சா நாமத்தை யோக சுவாமிகளிடம் இருந்து பெற்றுக் கொண்டார். சுவாமிகளின் சொற்படி கிழக்கு மகாணத்திற்குச் சென்று நெல் விதைத்து, அறுவடை செய்து ஏழைகளுக்கு உணவளித்தார். செங்கலடியில் சிவதொண்டன் நிலையத்தை உருவாக்கினார். பின்னர் இங்கிலாந்திற்குச் சென்று தனது ஆன்மீகப் பணியை ஆற்றத் தொடங்கினார். சுவாமிகளையும் அவரது பெருமைகளையும் பற்றி ஆங்கிலத்தில் பல கட்டுரைகளை எழுதினார். இதனால் சுவாமிகளை ஆங்கிலேயர்களும் அறிந்து கொண்டனர். யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும் இவரே. இதே போன்று ஸ்பனிஸ் நாட்டவர் ஒருவர் யோக சுவாமிகளிடம் சந்திரபாலா என்னும் தீட்சா நாமம் பெற்று அங்கு பணியாற்றிப் பல யோக நிலையங்களை அமைத்தார். அவை இன்று வரை செயற்பட்டு வருகின்றன. இவர்கள் அனைவருடாகவும் தூய சைவ வழிபாட்டு முறையை மேலைத்தேசத்திற்கு அறிமுகம் செய்து வேரூன்றச் செய்த மஹா ஞானியாக யோக சுவாமிகள் விளங்குகின்றார்.

## தமிழர் மனங்களில் நிலைத்த சுவாமிகள்

கண்கண்ட தெய்வமாகத் தமிழர்களால் மதிக்கப்பட்ட தவத்திரு யோக சுவாமிகள் தனது அருள் வாக்கினாலும் புனித செயல்களாலும் உலகோர் அனைவரையும் ஆட்கொண்டார். முக்காலத்தையும் உணர்ந்த ஒரு முனிவராக யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து அருள்பாலித்து வந்தார். கொழும்புத் துறையைப் பூலோக கைலாயமாக மக்கள் மனதில் இடம் பெறச் செய்தார். அவர் கொழும்புத்துறையில் ஏற்றிய ஆன்மீக தீபம் உலகெங்கும் பரவிப் பிரகாசித்தது. உலகப் புகழ்பெற்ற ஆன்மீக ஞானியாக விளங்கும் தவத்திரு யோக சுவாமிகள் யாழ்ப்பாணத்து மாமுனிவர் என அனைவராலும் அழைக்கப்படுகின்றார்.

யோக சுவாமிகளால் அருளப்பட்ட பாடல்கள் அவரது காலத்திலேயே "நற்சிந்தனை" எனும் நூலாக வெளியிடப்பட்டது. சைவசித்தாந்தம், வேதாந்தம், அநுபூதி, வாழ்க்கைத் தத்துவம், நிலையாமை போன்ற கருத்தியல்கள் கொண்ட அற்புதமான அருமருந்தாகவும் இசைநயம் பொருந்தியவையாகவும் நற்சிந்தனைப் பாடல்கள் விளங்குகின்றன.

அவரது பாடல்கள் பலவற்றில் தனது ஞான குருவான செல்லப்ப சுவாமிகளைப் பற்றி மிகவும் உயர்வாகக் குறிப்பிடுகின்றார். குருவின் மகத்துவத்தையும் இப்பாடல்கள் அழகாகக் குறிப்பிடுகின்றன. நற்சிந்தனைப் பாடல்கள் மிக உயர்ந்த இலக்கிய, இசைத் தரம் கொண்டவைகளாகச் சுவாமிகளால் அருளப்பட்டுள்ளன. எளிய தமிழில் அனைவருக்கும் பொருள் விளங்கும் தன்மை கொண்டதாக இருப்பதும் நற்சிந்தனையின் பெரும் சிறப்பாகும்.

பலவிதமான சிறப்புக்களுடனும் உலகத் தமிழர்களின் ஆன்மீக குருவாக விளங்கிய தவத்திரு யோக சுவாமிகள் **1964.03.24** அன்று அதிகாலை தனது **92**வது வயதில் சிவனுடன் சங்கமமானார். ஈழத்தின் தேசிய பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்தின் பத்திரிகைகளும் அவரது மறைவு பற்றிய செய்தியை முன் பக்கச் செய்தியாக வெளியிட்டன. பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் கண்ணீரோடு அவரது திருவுடல் கொழும்புத் துறை துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சுவாமிகளின் வரலாற்று ஆவணப் படம் இ.தனஞ்சயன் என்பவரால் அண்மையில் படைத்தளிக்கப்பட்டுள்ளது. என்நெஞ்சில் இடங்கொண்ட பெரியார், யோகசுவாமிகள் - வாழ்க்கையும் வழிகாட்டலும், நற்சிந்தனை போன்ற நூல்கள் சிவதொண்டன் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் இக்கட்டுரையை எழுத உதவின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு யோக சுவாமிகள் அருளிய காப்பும் பொருளும்

மனிதர்களாகிய நாம் இயற்கையிடமிருந்தே சக்தியைப் பெற்றுக் கொள்கிறோம். வாழ்வென்னும் பெரு நிகழ்வின் ஊடு சகமனிதர்களுடன் அச்சக்தியைப் பகிர்ந்து கொள்கிறோம். தனித்தியங்குதல் சாத்தியமன்று. மேலும் மானிட வாழ்வில் நாம் மேற்கொள்ளும் பயணங்கள், அப்பயணத்தில் எதிர்கொள்ளும் நிகழ்வுகள், வாழ்வு பற்றிய உடல், மன எதிர்வினைகள் என்பவற்றின் காரணமாக சக்தி விரயமாகின்றது. சேகரமாகிய சக்தியானது சுதர்மத்தின் பொருட்டு செலவிடப்படும் போது அது மீளவும் பன்மடங்காகத் திரும்பி வருகிறது. தேவையற்ற விதத்தில் சக்தியைச் செலவிடாதிருக்க இறையருளும் குரு வழிகாட்டலும் உதவுகின்றன.

வாழ்வினை நல்லமுறையிலே வாழவும் சுதர்மத்தில் இடையூறேதும் ஏற்படாதிருக்கவும் எமக்கோர் பாதுகாப்புக் கவசம் தேவைப்படுகிறது. அவ்வகையில் தவத்திரு யோக சுவாமிகள் அருளிய காப்புச் செய்யுள்களின் சிறப்புக்களையும் அவற்றின் மெய்ப் பொருளையும் விளங்கிக்கொள்வது காலத்தின் தேவையாகும்.

***அத்துவிதப்பொருள் காப்பாம் - எனக்***
***கடியார்கள் என்றென்றும் காப்பாம்***
***சித்தரும் தேவரும் காப்பாம் - எந்தன்***
***சித்தத்திலங்கும் திருவருள் காப்பாம்.***

ஆன்மாவையும் இறைவனையும் ஒன்றாகக் காணும் மனோபக்குவ நிலையை அத்துவித நிலை என்பர். இதனை இரண்டின்மை எனவும் கூறுவர். இவ்வொருமைத் தன்மையானது அடியார்களை இன்னல்களிலிருந்து காக்கவல்லது. புறத்தே குருவுக்குப் பணிவிடை செய்யும் அடியவர்கள் குருவைக் காப்பது போலத் தோன்றினாலும் குருவே அவர்களை எந்நேரமும் காப்பார். குருவருள் கைவரப் பெற்றால் சித்தர்களும் தேவர்களும் அடியவர்களைக் காக்கத் தாமாகவே முன்வருவர். குருவருளே திருவருள் என்பர். அவ்விதமே குருவருளானது சித்தத்துள் ஊடுருவிக் கலந்துநிற்கும் திருவருளாகப் பரிமாற்றமடைந்து குருவைச் சரணடைந்த அனைவரையும் காத்துநிற்கும்.

***அட்ட வசுக்களும் காப்பாம் - எனக்***
***கானந்தமான பராபரன் காப்பாம்***
***எட்டுத் திசைகளும் காப்பாம் - எனக்***
***கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம்.***

பூமியின் பஞ்சபூத சக்திகளையும் அதன் இயற்கைக் கோட்பாடுகளையும் நிர்வகிக்கும் இறை ஆற்றல்கள் அட்டவசுக்கள் எனப்படுவர். அவர்களின் அருளினால் மனித உடலில் பஞ்சபூத ஆற்றல் சமப்படுகின்றது. மனித உடலில் மூலாதாரத்தில் உறைந்திருக்கும் குண்டலினி எனப்படும் உயிராற்றல் முள்ளந் தண்டின் ஊடாக மேலெழுந்து சிரசைக் கடந்து பிரபஞ்சத்தோடு ஒன்று கலக்கும் போது பேரானந்த சுகானுபவம் உணரப்படுகிறது. இதுவே பரவெளியில் ஆன்மா எய்தும் ஆனந்தக் களிப்பாகும். இப்பேரனுபவத்தின் தோற்றவடிவமே பராபரன். வழிபாடுகள் மூலம் அந்தப் பராபர சொரூபத்தோடு தொடர்பு கொள்வதன் மூலம் பராபர வெளியின் அனுபவம் கிட்டுகிறது. அவ்வனுபவமும் பெருங் காப்புணர்வே ஆகும். பூமியில் வாழும் மானிடர்கள் அட்டதிசைகளால் ஆளப்படுகிறார்கள்.

பராபரத்திற்குத் திசைகள் கிடையாது. அட்ட திசைகளும் தன்னுள்ளடங்க திகம்பரமாய் நிற்கும் பராபரமாகிய பெருமையம் எமக்கு எட்டுத் திசைகளிலிருந்தும் காவலை வழங்கும். ஆன்மாவானது விழிப்படைந்து பிரபஞ்ச மையத்தோடு ஒன்று கலப்பதே சிவசக்தி ஐக்கியமாகும். இதுவே சர்வவியாபகத் தன்மையுமாகும். இத்தன்மை யெய்திய ஆன்மாவானது எங்கும் நிறைந்த சிவசக்தியினால் காக்கப்படுகிறது.

***பிராணன் அபானனும் காப்பாம் - என்னைப்***
***பிரியாதிருக்கும் பிரணவம் காப்பாம்***
***அராவணி வேணியன் காப்பாம் - எனக்***
***கருளையளிக்கும் குருபரன் காப்பாம்.***

பிராணன் என்னும் உள்மூச்சும் அபானன் என்னும் வெளிமூச்சும் புருவ மத்தியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்குவதே வாசியோகம் எனப்படும். வாசியோகம் சித்தித்தால் ஆக்ஞை மையம் என்னும் புருவப் பூட்டு திறந்து கொண்டு ஏழாம் ஆதாரமாகிய சகஸ்ராரம் என்னும் உயர் சக்கரம் இயக்கம் பெறும். இதனால் குண்டலி யோம், குண்டலினி யோம் நிறை நிலையடைய பிரணவமாகிய அனாதி ஒலி அப்போது முதல் காவலாக வருகிறது. ஆதலால் பிராண அபான வாயுக்களைக் காத்து அவற்றை வணங்கிப் பணிந்து அவற்றின் காவலைப் பெறுவதால் வாசியோக சித்தியும் சிவஐக்கியத்தினால் பிரணவத்தின் காவலும் கிடைக்கின்றது. அரவமானது குண்டலினி சக்தியின் குறியீடாகக் கொள்ளப்படுகின்றது. அச்சக்தியை வென்று அதனைத்தனது ஆபரணமாக்கி அணிந்திருப்பவர் அராவணி வேணியனாகிய சிவபெருமான். அவரை வணங்குவதால் சரப்பயிற்சியில் (மூச்சுப்பயிற்சி) சித்தி கிட்டுவதோடு குண்டலினி சக்தி சிரசினையடைந்து ஆன்ம விடுதலைக்காக குருபரனின் அருளை வேண்டிநிற்கும்.

**பஞ்சப் புலன்களும் காப்பாம் - என்னைப்**
**பரவுமடியவர் அனுதினம் காப்பாம்**
**குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல**
**குழந்தை வடிவேலன் என்றென்றும் காப்பாம்**

ஆன்மசக்தியானது ஐம்புலன்களாலேயே விரயமாக்கப்படுகின்றது. புலனொடுக்கத்தோடு குருவையடைந்து சேவை செய்யும் அடியவர்களைக் குருவானவர் எந்நேரமும் காத்து நிற்பதோடு அவர்களின் புலன்களையும் தூய்மைப்படுத்தி ஆன்மபலத்தையும் வழங்குகிறார். குஞ்சர முகத்தையுடைய விநாயகப் பெருமான் ஞானத்தின் குறியீடாகத் திகழ்கிறார். அதுமட்டுமல்லாது குழந்தை வடிவேலனே கபால உச்சியில் சகஸ்ரார சக்கரத்தில் ஆயிரமிதழ்த் தாமரையில் வீற்றிருக்கிறார். அவரருளும் அனுமதியுமின்றிக் கபாலவாயில் திறவாது. குருவருளால் புலனொடுங்க புலனொடுக்கத்தினால் சுழுமுனைநாடி இயக்கம் பெற்று அந்நாடியின் ஊடு விநாயகரின் காப்பைப் பெற்று குண்டலினி சக்தி கபால வாயிலை எட்ட அங்கே முருகப்பெருமானின் காவலும் ஆசியும் பெறப்படுகிறது. இதுவே பெருங்காப்பு ஆகும்.

**சந்திர சூரியன் காப்பாம் - எங்கும்**
**தங்குமுயிர்கள் அனைத்துமென் காப்பாம்**
**மந்திர தந்திரம் காப்பாம் - நான்கு**
**மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம்.**

அண்டத்தில் உள்ள உயிர்களுக்குப் பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் சக்தியை வழங்கி இயக்கிக் கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாது வலது கண்ணிலிருந்து சூரியனும் இடது கண்ணிலிருந்து சந்திரனும் முறையே புத்தியையும் மனதையும் ஆள்கின்றனர். அதனால் சூரிய சந்திரரை வணங்கி அவர்களின் காப்பைப் பெறுதல் வேண்டும். மேலும் சூரியனார் ஒளிமுதலாவார். அவரின் காப்பைப் பெறுதலென்பது ஒளியை வசப்படுத்தி பிந்து தத்துவத்தினை வெல்லும் யோகத்தை குறிக்கிறது. மந்திரமானது ஒலியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை மனத்தின் திறத்தினால் இயக்கப்படுகிறது. அது நாதவடிவாய் உள்ளது. அனைத்து உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமான நாத விந்தின் சூட்சுமங்களை குருவருளால் நன்கு உணர்ந்து கொள்ளும் மானிடவுயிர்கள் சூரிய சந்திரரின் ஒளிக் காப்பினைப் பெற்றுக் கொள்வர். மேலும் நான்கு மறைகளையும் சிவாகமங்களையும் பேணுவதாலும் அவற்றை முறைப்படி ஓதுவதாலும் மாபேரளவுடைய நிலவுலகம் வான்முகில் வழாது பெய்து, மலிவளம் சுரக்க முறைப்படி நீதி தவறாத ஆட்சியோடு நன்கு பாதுகாக்கப்படுகிறது.

ஆகவே தவயோக சுவாமிகளின் அனுபூதி ஞானத்தில் விளைந்த இக்காப்பு மெஞ்ஞான விசாரத்தை மட்டுமல்லாது உலகாயதத்தின் சாரத்தையும் கொண்டுள்ளதால் அதனை நன்கு பொருளுணர்ந்து பண்ணோடு ஓதுவதால் தெய்வீக மின்னதிர்வுகளை உடைய காப்பு வளையம் மெய்யாகவே, மெய்யாகவே எம்மைச் சூழ்ந்து எந்நேரமும் காத்துநிற்கும் என்பது திண்ணமே.

..யோகி..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேரிசை வெண்பா**

ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன எல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன் நீ யாரடா என்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்


அருளொளிக் குள்ளே புகுந்து சென்றேன் யான் ஆங்கே
இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டேன் - பொருளறியேன்
ஓர் பொல்லாப் பில்லையென ஓதினான் கேட்டு நின்றேன்
மர்மம் தேராது மலைத்து

மலைத்து நின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்து நின்ற மாயை அகலத் - தலைத் தலத்தில்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம் மறந்து நின்றேன் வியந்து

வியந்து நின்ற எந்தனுக்கு வேதாந்த உண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் - நயந்து கொள்
அப்படியே உள்ளது காண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோர் உற்று

உற்றாரும் போனார் உடன் பிறந்தார் தாம் போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில் - மற்றாரும்
தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பார் இன்றி இருந்தேன்

தவத்திரு யோக
சுவாமிகள் தனது
குருநாதரான செல்லப்ப
சுவாமிகளிடம் இருந்து
அருள் பெற்ற தெய்வீக
வரலாற்றை நேரிசை
வெண்பா வடிவில்
இவ்வாறு கூறுகின்றார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் இசை மேதை சங்கீதபூசணம் சி.கணபதிப்பிள்ளை

ஈழத்தின் செந்நெறி இசை வரலாற்றில் மரபு தவறாத குரலிசையாளராகக் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இசைப்பணியாற்றி வந்த சங்கீதபூசணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள் 17.03.2021 அன்று இறை பதமடைந்தார். பொன்னாலை வரகவி பே.க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் மாணவனும் பெறாமகனுமான இவர் இசைநாடக மரபில் வளர்ந்து செந்நெறி இசைத்துறையில் ஒளி வீசிய உயர்ந்த கலைஞனாக அனைவராலும் மதிக்கப்படுகின்றார்.



"சுருதி லய பாவம் நிறைந்து விளங்கும் சுத்த சங்கீதமே சுகம் தரும்" என்னும் மகுட வாசகத்தைத் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் கணபதிப்பிள்ளை அவர்கள். "தராதரம் தரம் தரா" என்பதும் "பத்திரம் பத்திரம்" என்பதும் அவரது நகைச்சுவையான தத்துவங்கள் ஆக இருந்தன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதபூசணப் பட்டம் பெற்ற ஒப்பற்ற பாடகராக இருந்த போதும் தாய் மண்ணின் நாட்டாரியல் கலைகளையும் நேசித்து வந்தவர். அத்துடன் தனது வாழ்நாளின் அதிக நேரத்தைப் பாடசாலை ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் கழித்து அவர்களின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டவர். வித்துவான் எனும் சொல்லுக்குப் பொருத்தமான ஒருவராக அனைவராலும் மதிக்கப்பட்ட இவர் சிறந்த விமர்சகராகவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட இவர் ஸ்வராட்சரமாகக் கற்பனாஸ்வரம் பாடுவதில் தன்னிகரற்றவர்.

அவரது இழப்பு ... பேரிழப்பு ...

***தாய் பெயர்*** - வள்ளியம்மை

***தந்தை பெயர்*** - சுப்பையா

***பிறப்பு*** - 16.10.1939

***கல்வி***

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

***இசைக் கல்வி***

மூளாய் வலங்கைமான் திரு ஆறுமுகம், இணுவில் வி.எஸ். மாசிலாமணி, வட்டுக்கோட்டை வ.இரத்தினம், வடலியடைப்பு திரு.சிங்காரவேலு, சங்கீதபூசணம் வேலாயுதபிள்ளை, சங்கீதபூசணம் இரத்தினசபாபதி,

***பட்டப்படிப்பு***

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (1959 -1963)

***தமிழகத்தின் இசை ஆசான்கள்***

மன்னார்குடி எஸ்.இராஜகோபாலபிள்ளை, மைலம் எம்.பி.வஜ்ரவேல் முதலியார், திருப்பாம்புரம் ரி.என். சிவசுப்பிரமணிய பிள்ளை, ரி.கே. ரங்கசாமி, எஸ்.வேணுகோபால், எம். எம்.தண்டபாணிதேசிகர்,

***அரங்கேற்றம்***

ஆனி, 1963, பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம்

***ஆசிரியப் பணி***

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, குருநாகல் இந்துத் தமிழ் மகாவித்தியாலயம்

***உயர் பதவி***

சங்கீத வித்தியாதரிசி, கல்வியதிகாரி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)

***மனைவி பெயர்*** - சந்திரபூபதி

***இறுவட்டுக்கள்***

சிறுவர் பாடல்கள், பொன்னாலய கீதங்கள், சகலகலாவல்லி மாலை, அருளமுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இதழ்கள் சங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டு வருகின்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், 20.02.2021 அன்று திருநெல்வேலியில் அமைந்துள்ள "எங்கட புத்தகங்கள்" அலுவலகத்தில் ஒன்று கூடல் ஒன்றினை நிகழ்த்தி யாழ்ப்பாண இதழ்கள் சங்கம் என்னும் அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

ஜீவநதி, கலைமுகம், தாயகம், புதிய சொல், அறிந்திரன், ஆயகலை, வலு, நிமிர்வு, கடல், நடி, தொன்ம யாத்திரை, எங்கட புத்தகங்கள் போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள், நிதி நெருக்கடிகள், சஞ்சிகைகளின் தராதரம், சந்தைப்படுத்தலில் கைக்கொள்ள வேண்டிய உத்திகள் போன்ற பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் பிற மாவட்டங்களில் இருந்து வெளியாகின்ற சஞ்சிகைகளையும் இந்த அமைப்புடன் இணைத்துக் கொள்வது பற்றியும் ஆராயப்பட்டது.

18.03.2021 அன்று நடைபெற்ற இக்குழுமத்தின் மூன்றாவது சந்திப்பில் "அறிந்திரன்" இதழின் ஆசிரியர் திரு.கணபதி சர்வானந்தா அவர்கள் தலைவராகவும் "எங்கட புத்தகங்கள்" இதழின் ஆசிரியர் கு.வசீகரன் அவர்கள் செயலாளராகவும் "திரு சி.கிரிசாந்த் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

"கலைமுகம்" இதழின் ஆசிரியர்,திரு செ.எமில், "நிமிர்வு" இதழின் ஆசிரியர் திரு கிரிசாந், "தொன்ம யாத்திரை" இதழின் ஆசிரியர் திரு யதார்த்தன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# நாடக நிகழ்வுகள்

## சம்பூர்ண அரிச்சந்திரா

26.02.2021 அன்று, பலாலி கிழக்கு - பத்திரகாளி கோவிலில் சம்பூர்ண அரிச்சந்திரா என்னும் இசைநாடகம் சிறப்புற இடம் பெற்றது. இசைநாடகக் கலைஞர் டேவேந்திரராஜா அவர்களின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் திருமதி மனோகரி சற்குருநாதன், திரு இரத்தினகுமார், திரு டேவேந்திரராஜா, திரு ஜஸ்ரின், திரு தம்பித்துரை, திரு ரஜீவன், திரு தயாநிதி, திரு பிரதீபன், திரு செந்தில், செல்வன் துரமிதன் ஆகியோர் நடிகர்களாகவும் திரு றொபேட் திரு முருகையா ஆகியோர் துணையிசைக் கலைஞர்களாகவும் அணி செய்தனர்.

முழு இரவு நிகழ்வாக நடந்தேறிய இந்நிகழ்வைப் பெருமளவான இரசிகர்கள் கண்டு களித்தனர்.

## களங்கம்

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் களங்கம் எனும் தவக்கால ஆற்றுகை கலைத்தூது கலையரங்கில் பங்குனி மாதத்தின் 26,27ஆம் திகதிகளில் மாலை 6.30 மணியளவில் நிகழ்த்தப்பட்டது.

கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட இந்நாடகம் திரு யோண்சன் ராஜ்குமார் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டது.

பல நூற்றுக்கணக்கான நடிகர்களைக் கொண்டதாக நிகழ்த்தப்படும் தவக்கால ஆற்றுகையே ஈழத்தில் நிகழ்த்தப்படும் மிகப் பெரிய நாடகமாகும்.

கடந்த பல ஆண்டுகளாகத் திருமறைக் கலாமன்றம் இவ்வாறான நாடகங்களை பல விதமான கருத்து நிலைகளில் நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரத நாட்டிய அரங்கேற்றம்



வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் அதிபர் திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களின் மாணவிகளான செல்வி யதுஷாலினி வீரசிங்கம், செல்வி பவிஷாலினி வீரசிங்கம், செல்வி ஹம்சினி வன்னியசிங்கம் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் 14.03.2021 அன்று மாலை வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



திருமதி வீ.சூரியயாழினி அவர்களின் நெறியாள்கையிலும் நட்டுவாங்கத்திலும் இவ்வரங்கேற்றம் நிகழ்த்தப்பட்டது. திருமதி ஜெயமாலினி துசாந் அவர்களும் நட்டுவாங்கக் கலைஞராக அணிசெய்தார்.



திரு.எம்.எஸ்.பிரதீபன், திரு.ப.சிவமைந்தன் ஆகியோர் பாடகர்களாகவும் திரு.அ.ஜெயராமன் அவர்கள் வயலின் இசையாளராகவும் திரு.ஞா.வசந் அவர்கள் மிருதங்கக் கலைஞராகவும் திரு.க.தேசிகன் அவர்கள் குழலிசைக் கலைஞராகவும் இந்த அரங்கேற்றத்தைச் சிறப்புச் செய்தனர்.

## பரத நாட்டிய அரங்கேற்றம்



திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவி செல்வி யஸ்மிதா பிரபாகரன் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் 03.04.2021 அன்று கொழும்பு, பத்தரமுல்லையில் நடைபெற்றது.

திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் நெறிப்படுத்தலிலும் நட்டுவாங்கத்திலும் நிகழ்த்தப்பட்ட இவ்வரங்கேற்றத்தின் குரலிசையாளராக திரு.அ.ஆரூரன் அவர்களும் மிருதங்கக் கலைஞராக நல்லை க.கண்ணதாஸ் அவர்களும் வயலின் கலைஞராக திரு.ச.திபாகரன் அவர்களும் தாள இசைக் கருவிகளை திரு.இ.இரத்தினதுரை அவர்களும் இசைத்தனர்.

திரு எஸ்.விஸ்வநாதன் அவர்களும் செல்வி எஸ்.மிருணாளினி அவர்களும் நிகழ்வின் தொகுப்பாளர்களாகப் பணியாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நாமந் தன்னைக் காரணப் பெயராய்ப் பெற்றுக் கொண்ட

# நாடக அரங்கக் கல்லூரி

## பாரதியின் பாஞ்சாலி சபதம் : ஓர் அனுபவக் குறிப்பு

நாடக அரங்கக் கல்லூரியின் 43 வருடகால நீண்ட பயணத்தில் காலத்துக்குக் காலம் பல அரங்க ஆளுமைகள் சேர்ந்து பயணித்தமை பற்றி இத்தொடரின் முதல் பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஆயகலை, இதழ் ஒன்றில்) 1994 இல் அவ்வாறான நான்கு கலைஞர்கள் 'பாரதியின் பாஞ்சாலி சபதம்' என்னும் வரலாற்று நாடகத்தில் இணைந்தனர். குழந்தை ம. சண்முகலிங்கம், எஸ்.ரி.அரசு, இசைவாணர் கண்ணன், ச.உருத்திரேஸ்வரன் ஆகியோர் இப் படைப்பினை 1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நாடக அரங்கக் கல்லூரிக்காகத் தயாரித்து வழங்கினர்.

இக் கால கட்டத்தில் நாடக அரங்கக் கல்லூரியால் செங்குந்தா இந்துக் கல்லூரியில் வாராந்தம் நாடக பயிலரங்கு ஒன்று மாலை வேளைகளில் நடத்தப்படுவதுண்டு. நாடகத்தில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட பத்துப் பதினைந்து ஆர்வலர்கள் ஒன்று கூடி குழந்தை சண்முகலிங்கம் அவர்களிடம் நாடகப் பயிற்சிகளை பெற்று வந்தார்கள். அந்தப் பயிலரங்கே எனது நாடக அரங்கக் கல்லூரிப் பிரவேசமாகவும் அமைந்திருந்தது. கலைமாணிப் பட்டப் படிப்பில் நாடகமும் அரங்கியலும் பாடத்தின் ஆற்றுகைப் பட்டறிவுக்காக அப்பயிலரங்கில் என்னையும் இணைத்துக் கொண்டிருந்தேன்.

அந்தப் பயிற்சிகளின் நீட்சியாக நாடகம் ஒன்றினை ஆற்றுகை செய்யும் விருப்பத்தினால் முகிழ்த்ததே பாஞ்சாலி சபத நாடக ஆற்றுகை. நாடக அரங்கக் கல்லூரியின் இயக்குனர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் பாரதியின் பாஞ்சாலி சபதத்தை நாடகவடிவமாக அரங்க ஆற்றுகைக்காகத் தொகுத்திருந்தார். மூத்த நாடகக் கலைஞர் அமரர் எஸ்.ரி.அரசு (அரசையா) அவர்கள் நாடகத்தின் நெறியாள்கை, ஒப்பனை ஆகியவற்றை பொறுப்பேற்றுக் கொண்டார். நாடகத்திற்கான இசையமைப்பை இசைவாணர் கண்ணன் அவர்கள் மேற்கொண்டார். நாடகத்தின் பிரதான பாத்திரங்களில் ஒன்றான துரியோதனன் வேடத்தில் அமரர் உருத்திரேஸ்வரன் நடித்திருந்தார். இவர்களுடன் நாடகத்தில் ஈடுபாடு கொண்ட பலர் நடிகர்களாகவும் ஏனைய அணிசேர் கலைஞர்களாகவும் இணைந்திருந்தார்கள். பற்குணம், தர்மகுலசிங்கம், றெஜினோல்ட், ஞானபாஸ்கரன், சர்மா, லோஜினி, ஞானசூரியர், சிவகுமார், கிருபாகரன், சிவசிதம்பரம், ரதிதரன், செல்வகுமார், கமலநாதன், வள்ளுவன், பரமேஸ்வரன், தயாநிதி, மகேஸ்வரன் ஆகியோர் பல்வேறு பாத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

பல்வேறு இடங்களிலிருந்து வருவோர், வெவ்வேறு நிறுவனங்களில் வேலை செய்வோர், மாணவர்கள் எனக் கலைஞர்கள் பரந்திருந்தபோதும் நாடக ஒத்திகைகளின் போது குறித்த நேரத்துக்கு அனைவரும் வந்து சேர்வது நாடக அரங்கக் கல்லூரியின் நேர ஒழுக்கத்துக்கு சான்றாயிருந்தது. நாடக அரங்கக் கல்லூரியினால் தயாரிக்கப்படும் நாடகங்கள் குறிப்பிடும் நேரத்துக்குச் சரியாக ஆரம்பிக்கும் என்பதைக் குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார். இதனை இந்த நாடக ஆற்றுகையில் நேரடியாகக் கண்டு கொள்ள முடிந்தது.



குழந்தை .ம.சண்முகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசையா அவர்கள் ஒத்திகைகளை மிகவும் நேர்த்தியாக மேற்கொண்டார். நாடக வசனங்கள் யாவும் அவருக்கு ஏற்கனவே மனப்பாடமாக இருந்தன.

நடிகர்கள் ஒத்திகையின் போது வசனங்களை பிழையாகக் கூறினால் சரியான வசனம் உடனே அரசையாவிடமிருந்து வரும். துரியோதனன், சகுனி, தருமன் திருதராஷ்டிரன் போன்ற பாத்திரங்களுக்கு மிக நீண்ட வசனங்கள் வேறு. அரசையா அவர்களோ ஒத்திகை தொடங்கிய நேரம் முதல் மேடையின் முன்னால் கதிரையொன்றில் அசையாமல் உட்கார்ந்திருப்பார். வசன உச்சரிப்புகள், உணர்வு வெளிப்பாடுகள், உடல் மொழி, என அனைத்து அம்சங்களையும் மிக நுணுக்கமாகக் கவனித்து அவரின் மனதினுள் வடித்து வைத்துள்ள பாத்திரமாக வரும் வரை மீண்டும் மீண்டும் கற்றுக் கொடுப்பார். பயிற்சி அனுபவம் மிக கடுமையானதாக இருந்தது. ஒருமுறை சகுனியாக நடித்த சிவகுமார், அரசையாவின் பேச்சின் உக்கிரத்தால் நாடகத்திலிருந்து தான் விலகப் போவதாகக் கூறிய போதும் பின் நாட்களில் அவரின் நடிப்பாற்றல் மிகச் சிறப்பாக அமைந்தமை பற்றிக் குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் பாராட்டிக் குறிப்பிட்டிருந்தார்.

ஒத்திகையில் எமக்கேற்பட்ட மற்றொரு அனுபவத்தையும் இங்கு குறிப்பிடலாம். நானும் றெஜினோல்டும் நகுலன், சகாதேவன் பாத்திரங்களில் நடித்திருந்தோம். எமக்கான வசனங்கள் மிகக் குறைவு. எனினும் நாடகத்தில் அதிக நேரம் மேடையிலே பாண்டவர்களாக தோன்ற வேண்டும். அமரர் உருத்திரேஸ்வரன் அவர்களின் நடிப்பும் வசனங்களும் எமை ஈர்க்க ஒத்திகைகளின் போது சில சமயம் நாம் மேடையில் நின்றவாறே நாடகத்தை ரசிக்கத் தொடங்கி விடுவோம். இதைக் கவனித்துவிட்ட அரசையா 'நாடகம் பார்க்கிறதென்றால் இஞ்சை எனக்குப் பக்கத்திலை வாங்கோ இரண்டு பேரும்' என்றார். அத்தோடு மேடையில் நின்று நாடகம் பார்ப்பதை நாங்கள் நிறுத்திவிட்டோம்.

இப்படியான பல சுவாரசியங்களுடன் ஒத்திகைகள் நடந்தன. ஒத்திகைகளின் போது குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் கூடவே இருந்து பாத்திரங்களின் இயல்புகள், உணர்வுகள், சூழ்நிலை போன்ற நுண்ணிய விடயங்களை விளக்கி நடிக்க ஊக்குவிப்பார். அவற்றை உள்வாங்கி நடிகர்களும் மிகச் சிறப்பாக தமது பாத்திரப் படைப்புகளை வெளிப்படுத்தி இருந்தார்கள்.

துரியோதனன் சபையோடு தொடங்கி, அவன் பொறாமையில் உழலல், சகுனியின் சூழ்ச்சி உபாயம், திருதராஷ்டிரனிடம் முறையிடல், துரியோதனன் சினம் கொண்டு தீமொழி கூறல், பாண்டவரைச் சூதுக்கு அழைக்க தந்தையிடம் முறையிட்டு அவர் மனதை மாற்றி அனுமதி பெறல், விதுரனை தூதனுப்பல், விதுரன் சென்று பாண்டவரை அழைத்து வரல், சூதாடுதல், சூதில் செல்வத்தை, நாட்டை, தம்பியரை, தன்னை தோற்று, இறுதியில் பாஞ்சாலியையும் தோற்றல், கௌரவர் வெற்றிக் கொக்கரிப்பு, திரௌபதையை இழுத்து வரல், இறுதியில் வீமன், அர்ச்சுனன் பாஞ்சாலி சபதம் ஆகிய சட்டகங்களை கொண்டு இந் நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது.


எஸ்.ரி.அரசு

அநீதிகளுக்கு எதிராய் கொதிக்கும் பாரதியும் இந்த நாடகத்தில் ஓர் பாத்திரமாகப் படைக்கப் பட்டிருந்தார். பாரதியின் ஆழமான நீண்ட கவி வரிகளை நாடக மாந்தர் உணர்வோடு பேசியபோது பார்வையாளர் பரவசத்தின் உச்சத்தை தொட்டு நாடகத்தோடு ஒன்றித்துப் போயிருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இசைவாணர் கண்ணன்

நாடகம் தொடங்கி திரை விலகும்போது பார்வையாளருக்கு முதுகுப்புறம் தோன்றத் தக்கவாறு பின் மேடையை நோக்கியவாறு துரியோதனன் தோன்றுவார்.

கன்னங் கரியது வாய்- அகல்
காட்சிய தாய் மிகு மாட்சிய தாய்,
துன்னற் கினியது வாய்- நல்ல
சுவைதரும் நீருடை யமுனை யெனும்
வன்னத் திருநதியின் -பொன்
மருங்கிடைத் திகழ்ந்த அம் மணி நகரில்,
மன்னவர் தங்கோமான் - புகழ்
வாளரவக் கொடி யுயர்த்து நின்றான்.

எனும் பாடலோடு அறிமுகமாவார். அமரர் உருத்திரேஸ்வரன் அவர்கள் தனது நடிப்பால் அரங்கு முழுவதையும் தனது கட்டுக்குள் வைத்திருந்தார். பொறாமை, சினம், சூழ்ச்சி, மகிழ்ச்சி என உணர்வுகளைக் கொட்டி நடித்திருந்தார்.

“பாண்டவர் முடியுயர்த்தே - இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை தான்
ஆண்டதோர் அரசாமோ - எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?”

என அவர் பேசிய வசனங்கள் இன்றும் காதுகளுக்குள் இனிக்கும்.

இந்த நாடகத்தில் இசைவாணர் திரு கண்ணன் அவர்களின் இசை பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். அவரது இசையில் உருவான பாடல்கள் நாடக உணர்வுக்குள் பார்வையாளரை இணைத்திருந்தது.

‘அஸ்தினாபுரமுண்டாம்......’ ‘அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்......’ ‘கன்னங்கரியதுவாய்......’ ‘அத்தின மாநக ரத்தினில் வந்தனர்......’ ‘விதுரன் வரும்செய்தி தான் செவியுற்று......’ ‘காயுருட்டலானார்......’ ‘துச்சாதனன் எழுந்தே......’ ‘விம்மி அழுதாள்......’ ‘தேவி பராசக்தி......’ போன்ற பாடல்களை கிரிதரன், ஞானபாஸ்கரன், துளசி, ஜெயந்தி போன்றவர்கள் பாடி யிருந்தார்கள்.

ஒப்பனையை அமரர் அரசையா அவர்கள் மிக நேர்த்தியாக மேற்கொண்டார்.

அரச நாடக பாத்திரங்களுக்கான உடைகள், அணிகலன்கள், தோற்றப் பொலிவு போன்ற விடயங்களில் மிகுந்த கவனத்தோடு ஒப்பனைக் கலைஞர் திரு பெஞ்சமின் அவர்களுடன் இணைந்து மேற்கொண்டார். ஒப்பனை முடிந்ததும் நடிகர்களை தனித்தனியே முன்னால் அழைத்து தோளிலே தொட்டு கூர்ந்து பார்ப்பார். திருப்தியெனில் தனது மீசையை தடவியபடி புன்சிரிப்போடு தலையசைப்பார்.


ச.உருத்திரேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் உருத்திரேஸ்வரன் அவர்கள் நாடக அரங்கக் கல்லூரியோடு ஆரம்ப காலத்திலிருந்தே நெருங்கி செயற்பட்டிருந்தார்.அதன் பல தயாரிப்புகளில் பங்கேற்றிருந்தார்.

கல்லூரியின் வளர்ச்சியில் அவரின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. அதன் தொடர்ச்சியாகவே பாஞ்சாலி சபதம் நாடகத்திலும் அவர் பங்கேற்றிருந்தார். ஏற்கனவே பல நாடகங்களில் நடித்த அனுபவமுடைய மூத்த கலைஞரான அவர் துரியோதனன் பாத்திரத்துக்கு மிக கச்சிதமாகப் பொருந்தி இருந்தார். அவரது கம்பீரமான தோற்றம், குரல் போன்றன மேலும் சிறப்பம்சமாக இருந்தது. ஒத்திகைக்கு வந்த நேரத்திலிருந்து பாத்திரத்தின் உணர்வுக்குள் மூழ்கி விடுவார். ஒத்திகை நேரத்தில் ஏனைய நடிகர்களை ஊக்குவிப்பது அவரிடம் காணப்பட்ட முன்மாதிரியான பண்பாக அமைந்திருந்தது. 'தம்பி நல்லாச் செய்கிறீர்' எனப் பாராட்டத் தவறுவதில்லை. நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களில் நான்கு பேர் தற்போது எம்மோடு இல்லை. ஆயினும் அவர்கள் சாகாவரம் பெற்ற கலைஞர்களாக எம்மோடு என்றும் இருப்பார்கள். அமரர் உருத்திரேஸ்வரனும் சாகாவரம் பெற்ற கலைஞருள் ஒருவரே.

நாடக அரங்கக் கல்லூரியின் சிறந்த படைப்புக்களிலொன்றாக இந்த நாடகமும் அமைந்ததெனலாம். செங்குந்தா இந்துக் கல்லூரி, இளங்கலைஞர் மன்றம், கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி போன்ற இடங்களில் ஏழு தடவைகள் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.



அக்காலத்தில் இருந்த நாட்டுச் சூழல் காரணமாக பாஞ்சாலி சபதம் நாடகத்தை தொடர்ந்து மேடையேற்ற முடியாமல் போனது துரதிஷ்டவசமானது. எனினும் அந்த நாடகம் மூலமாக பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மிகவும் பெறுமதியானவை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று நான்கிற்கு முன்னரான காலத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் கல்லூரியின் அரங்கச் செயற்பாடுகள் பற்றி நிறையப் பகிரப்படவேண்டியுள்ளது. தொடர்ந்து கருத்தாடலாம்.

**க.ஞானபாஸ்கரன்,**
**பதிவாளர்,**
**நாடக அரங்கக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் அதிபர், நடன கலாவித்தகர் திருமதி பாலினி கண்ணதாஸ் அவர்களின் மாணவியும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் திரு திருமதி நேசகுமார் தம்பதியரின் மகளுமான செல்வி தானியா பிரியமரியா நேசகுமார் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 27.03.2021 அன்று யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக சென்.ஜோண்ஸ் கல்லூரியின் அதிபர் திரு.வி.எஸ்.பி.துசிதரன் அவர்களும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி து.துஷ்யந்தி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



அதிவணக்கத்துக்குரிய பேராயர் துஷாந்த லக்ஷ்மன் றொட்றிகோ அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி.இ.தேவபுஷ்பம் அவர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பகுதித் தலைவர் திருமதி வாசுகி ரவிராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்தில் திருமதி பாலினி கண்ணதாஸ் அவர்கள் நட்டுவாங்கக் கலைஞராகவும் வசாவிளான் தவமைந்தன் அவர்கள் குரலிசையாளராகவும் திரு க.கண்ணதாஸ் அவர்கள் மிருதங்கக் கலைஞராகவும் திரு.அ.ஜெயராமன் அவர்கள் வயலின் கலைஞராகவும் திரு.க.தேசிகன் அவர்கள் புல்லாங்குழல்க் கலைஞராகவும் அணி செய்தனர்.

வசாவிளான் தவமைந்தனின் புஸ்பாஞ்சலி, தமிழ்த் தாய் வணக்கத்துடன் கண்ட சாபு தாள அலாரிப்பு ஆகியவற்றுடன் நிகழ்வு இனிதே தொடங்கியது. அதன் பின்னர் ஜதிஸ்வரம் இடம்பெற்று நல்லை க.கண்ணதாஸ் அவர்களின் ஆக்கத்தில் தந்தை வணக்க லயக் கவிதை தொடர்ந்து இடம்பெற்றது. மதுரை முரளீதரன் அவர்களின் ரேவதி இராக, சதுஸ்ர ஜாதி துருவ தாளத்தில் அமைந்த பதவர்ணம் நிகழ்வின் முக்கிய நிகழ்வாக இடம்பெற்றது.

சிற்றுண்டி இடைவேளையைத் தொடர்ந்து மூளாயூர் தி.தவம் அவர்களின் ஹம்சாநந்தி இராக, ஆதி தாளக் கீர்த்தனையும் நல்லைக் கண்ணதாஸ் அவர்களின் மதுவந்தி இராக, ஆதி தாளப் பதமும் இடம்பெற்றன. ஊத்துக்காடு வெங்கடசுப்பையர் அவர்களின் கண்ணன் சிந்து இடம் பெற்று வசாவிளான் தவமைந்தனின் வர்ணரூபிணி இராக, ஆதி தாளத் தில்லானாவும் மத்தியமாவதி இராகத் தாய் மண்ணின் புகழ் பாடும் மங்களமும் நிகழ்வை இனிதே நிறைவு செய்தன. நாதன் ஒலியமைப்பும் புதுமை படைப்பகத்தின் காணொளிப் பதிவும் மனோ ஒளியமைப்பும் றெக்ஸ் படப்பிடிப்பும் நிகழ்வை மேலும் அழகு செய்து அவணபப்படுத்திக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆழப்பதிந்த சுவடுகள்**

## கலாபூஷணம் திருமதி.யசோதரா விவேகானந்தன்

### வடக்கிலிருந்து மத்திக்கு

வடக்கில் இடம்பெற்ற தொடர்ச்சியான யுத்த சூழல், தனது இரு பிள்ளைகளின் உயர்கல்வி, ஓய்வு பெறவிருக்கும் காலத்தில் மனத்திற்கும் உடலுக்குமான ஓய்வு, சுமுகமான புறச்சூழல் போன்ற காரணங்களை மனத்திற் கொண்டு திருமதி.யசோதரா விவேகானந்தன் அவர்கள் மத்திய மலைநாட்டின் ஊவா மாகாணத்தின் பதுளை கல்வி வலையத்திற்கு நடன பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக இடமாற்றம் பெற்று வந்தார்.

### அர்ப்பணிப்பின் ஆழம்

வட மாகாணத்தில் மிகச்சிறந்த நடன ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், முதுநிலைக் கலைஞர் எனப் பல பெருமைகளுடன் வலம் வந்த அம்மையார் இடமாற்றம் பெற்று பதுளைக்கு வந்த போது இங்கு சினிமாப்பாடல்களுக்கு பரதநாட்டியமாடும் கலாசாரத்தில் மூழ்கிக்கிடந்த இளம் மாணவ சமூகத்தினைக் கண்டு மனம் வருந்தினார். பதுளைக்கு வந்த சில காலங்களிலேயே அம்மாணவர்களிடம் இயற்கையாகவே காணப்பட்ட கலை ஆர்வத்தினையும் திறமையினையும் அம்மையார் நன்கு அறிந்துகொண்டார். எனவே நல்லதொரு கலையினை படிமுறையாக இந்த இளம் சமூகத்திற்கு அளிக்க வேண்டும் என்னும் மேலெண்ணம் கொண்டு தனது ஆசிரிய ஆலோசகர் பதவியிலிருந்து இறங்கி மீண்டும் ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார். இதற்காக பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தினைத் தேர்ந்தெடுத்து நடன ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் புதுவேகத்துடன் செயலாற்றத்தொடங்கினார்.

### பதுளையில் திலகநர்த்தனாலயம்

*1974 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் திருமதி. யசோதரா விவேகானந்தன் அவர்களது தந்தையார் தனது மனைவியின் நினைவாக 'திலகநர்த்தனாலயம்' என்னும் பெயரில் தனது புதல்வியின் பிரத்தியேக நடனப்பள்ளியை நிறுவினார். 33 வருடங்கள் தொடர்ச்சியாக வெற்றிகரமாக இயங்கிய திலகநர்த்தனாலயம், திருமதி. யசோதரா விவேகானந்தன் அவர்கள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியிலிருந்து வெளியேறிய போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. எனினும் பதுளைக்கு வந்ததன் பின்னர் பதுளையைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் முதல் கலை ஆர்வலர்கள், அரச உத்தியோகத்தர்கள், சாதாரண தொழிலாளர்கள் என அனைவரினதும் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கிணங்க பதுளையில் 2007.05.15 அன்று 7 மாணவர்களுடன் தனது திலகநர்த்தனாலயம் எனும் பிரத்தியேக நடனப்பள்ளியினை மீளவும் ஆரம்பித்தார். 2019 ஆண்டில் சுமார் 226 மாணவர்கள் திலகநர்த்தனாலத்தில் நடனக்கலையினைக் கற்றனர். இதில் சிங்கள மாணவர்களும் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் நடனம் பயின்ற ஆசிரியர்கள் சிலர் இக்காலப்பகுதிகளில் பதுளையில் நடன ஆசிரியர்களாக சேவையாற்றிக் கொண்டிருந்தனர். அம்மையாரது வருகையினை அவர்களும் நல்லதொரு வாய்ப்பாகக் கருதி அனைவரும் அவரை அணுகி அவரிடமிருந்து நடனத்தில் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்களில் திருமதி.யாழினி கமலகாந்தன், திரு.இன்பராஜா, செல்வி.ஸ்ரீதரி இராமநாதன், சிங்கள ஆசிரியை செல்வி. பிரபாசினி போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.



**கலாரசிக உருவாக்கம்**

ஒரு நிகழ்வின் வெற்றிக்கு நல்ல கலைஞர்களோடு நல்ல இரசிகர்களும் தேவை. அதிலும் சாஸ்திரியக் கலைகளை இரசிப்பதற்கு தனியான ஆர்வமும் பொறுமையும் அவசியமாகின்றது. அதுவரையில் சினிமாப்பாடல்களுக்கான நடனங்களையே பார்த்துப் பழகிய கண்களுக்கு புதிய இரசனையை ஏற்படுத்தவேண்டிய தேவையும் கட்டாயமும் திருமதி.யசோதரா விவோகானந்தன் அவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கூடாகவே இக்கலையினை சமூகத்தின் மத்தியில் பரவலாக்கம் செய்யமுடியும் என்பதையும் அவர் உணர்ந்தார். எனவே அதற்கான முதல் முயற்சியைத் தொடங்கினார்.

2008.05.15 அன்று 'சலங்கைகள் சங்கமம்' என்னும் நடன நிகழ்வு பதுளை சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திலகநர்த்தனாலயத்தின் ஆண்டு விழாவாக இடம்பெற்ற இந்நிகழ்வு பதுளை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதுவரையில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு தனியார் வகுப்புகளுக்கு அனுப்புவது போல் நடன வகுப்பிற்கும் தங்களது பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர்கள் நடன வகுப்பில் தங்களது பிள்ளைகள் எவற்றைக் கற்றுக்கொண்டார்கள் அவர்களின் திறமை யாது என்பவற்றினை இந்நிகழ்வினுக்கூடாகக் கண்டுகொண்டனர். மேலும் இந்நிகழ்வு பரதநாட்டியம் பற்றிய சமூக கண்ணோட்டத்தையும் உயரியதாக்கியது.

இந்நிகழ்வுக்குப் பிறகு மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோரும் இக்கலையின்பால் மதிப்பும் ஆர்வமும் கொள்ளத் தொடங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்களை மட்டுமன்றி அவர்களின் பெற்றோரையும் உற்றோரையும் இரசிகர்களாகச் சேர்த்ததன் மூலமாக சாஸ்திரியக் கலையினை இரசிகக்கூடிய மனப்பாங்கினை சமூகத்திற்கு வழங்கினார். இதன் மூலமாக கலாரசனை மிக்கதோர் சமூகம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

## கலை விழாவினது வளர்ச்சிப்படி

திலகநர்த்தனாலயம் நடனப்பள்ளியை ஆரம்பித்து ஒரு வருடப் பூர்த்தியை கொண்டாடுவதாக ஏற்பாடு செய்யப்பட்ட "சலங்கைகள் சங்கமம்" கலைவிழாவில் சுமார் 55 மாணவர்கள் கலந்து கொண்டனர். இறுவட்டில் பதிவு செய்யப்பட்ட பாடல்களுக்கு நடனமாடுவதை சிறிதும் விரும்பாத திருமதி.யசோதரா விவேகானந்தன் அவர்கள் இந்நிகழ்விற்காகத் திறமையான அணிசெய் கலைஞர்களைத் தன்னோடு இணைத்துக்கொள்ள விரும்பினார். அதற்கமைவாக பதுளை மண்ணின் கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் நோக்கில் திருமதி.அமுதா முருகேசு, திருமதி.குமுதினி கணேசமூர்த்தி ஆகிய இரு இசையாசிரியர்களை வாய்ப்பாட்டிற்காக தேர்ந்தெடுத்தார், மேலும் திரு.வேல்முருகு ஸ்ரீதரன் அவர்களை மிருதங்க இசைக்காகவும் திரு.ஜீவன் ஜோசப் அவர்களை வயலின் இசைக்காகவும் மட்டகளப்பில் இருந்து வரவழைத்து வெற்றிகரமாக நிகழ்வினை நடாத்தி முடித்தார்.

மீண்டும் இரண்டு வருடங்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு "நிருத்திய நிவேதனம்" என்ற பெயரில் கலைவிழா இடம்பெற்றது. முதலாவது கலைவிழாவின் வளர்ச்சிக் கட்டமாக இரண்டு தினங்கள் இந்நிகழ்வு இடம்பெற்றதோடு இம்முறை 75 மாணவர்கள் பங்குகொண்டார்கள். மேலும் இதில் வாய்ப்பாட்டிசை வழங்கும் வாய்ப்பினை பதுளையைச் சேர்ந்த இசையாசிரியர்கள் திருமதி.ஸ்ரீகௌரி கிருபானந்தன், திரு.முருகையா மணிமொழி ஆகியோருக்கு வழங்கினார். இவர்களோடு இணைந்து திருமதி.யசோதரா விவேகானந்தன் அவர்களின் புதல்வி செல்வி.ஜீவிகா விவேகனாந்தன் அவர்களும் வாய்ப்பாட்டிசைக் கலைஞராக பங்கேற்றார். மிருதங்க இசையினை வழங்குவதற்காக திரு.சிவராமன் ரதீஸ் அவர்களையும் வயலினிசையை வழங்குவதற்காக செல்வி.சாயிபகவதி சீதாராமன் அவர்களையும் தபேலா இசையினை வழங்குவதற்காக திரு. கிறிஸ்தோப்பிள்ளை அன்ரன் ராஜரட்ணம் அவர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்து நிகழ்வின் தரத்தினை மேலும் உயர்த்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வளர்ச்சிக்கட்டமாக 2012 ஆம் ஆண்டு சலங்கைகள் சங்கமம் கலைவிழா 100 மாணவர்களுடன் இரண்டு நாள் நிகழ்வாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் வாய்ப்பாட்டிசைக்கான வாய்ப்பினை பதுளையின் இசையாசிரியர் திருமதி.குமுதினி கணேசமூர்த்தி அவர்களுக்கு வழங்கினார். யாழ்ப்பாணத்திலிருந்து வருகைத்தந்த திரு.சிவராமன் ரதீஸ் அவர்கள் மிருதங்க இசையினையும், திரு.காண்டீபன் அவர்கள் வயலினிசையையும் வழங்கினார்கள்.


2015 ஆம் ஆண்டு கலைவிழாவினை மேலும் சிறப்புடையதாய் அமைக்க விரும்பிய திருமதி.யசோதரா விவேகானந்தன் அவர்கள் யாழப்பாணத்துக் கலைஞர்களை அணிசெய் கலைஞர்களாக இணைத்துக்கொண்டார். அந்தவகையில் இளம் கலைஞர்களான திரு.அழகேசன் அமிர்தசிந்துஜன் வாய்ப்பாட்டிசையினையும், திரு.அழகேசன் அமிர்தலோஜனன் மிருதங்க இசையினையும் வழங்க புகழ்பெற்ற முதுகலைஞரான திரு. அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் வயலினிசையை வழங்கினார். இரண்டு நாட்கள் இடம்பெற்ற இந்நிகழ்வில் 150 மாணவர்கள் பங்குகொண்டனர்.

தொடர்ச்சியாக 2017 ஆம் ஆண்டு கலைவிழாவிற்கு அணிசெய் கலைஞர்களாக மலையகத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவிகள் செல்வி.அனுசித்ரா செல்வி.சங்கீதவாணி ஆகியோரை வாய்ப்பாட்டிசைக் கலைஞர்களாக இணைத்துக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற முதுகலைஞர்களான திரு.சின்னத்துரை துரைராஜா அவர்கள் மிருதங்க இசையினையும், திரு.அம்பலவாணர் ஜெயராமன்எ வயலினிசையினையும் வழங்கினர். இரண்டு தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்நிகழ்விலும் 200 மாணவர்கள் பங்கேற்றனர். இக்கலைவிழாக்களினைப் பொறுத்தவரையில் திருமதி.யசோதரா விவேகானந்தன் அவர்கள் அணிசெய்க் கலைஞர்களாக யாழ்ப்பாணத்துக் கலைஞர்களுக்கு மட்டுமன்றி திறமை மிகுந்த உள்ளூர்க் கலைஞர்களுக்கும் சமனான வாய்ப்பளித்தார். அதுபோலவே முதுகலைஞர்களோடு இளம் கலைஞர்களையும் இணைத்து அவர்களுக்கான சிறந்த தளங்களைப் பெற்றுக்கொடுத்தார். இதற்கூடாக அணிசெய்க்கலைஞர்களின் திறமையும் இங்கு சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டது.

திலகநர்த்தனாலயத்தின் கலைவிழாவினது படிமுறையான வளர்ச்சி அதிகளவான மாணவர்களையும், இரசிகர்களையும் இணைத்துக்கொண்டது மட்டுமன்றி இலங்கையின் பல பகுதிகளைச் சேர்ந்த நல்ல அணிசெய் கலைஞர்களையும் இணைத்து ஊக்கப்படுத்தியதன் மூலம் பரந்துபட்ட தன்மையில் கலைவளர்ச்சிக்கு துணைசெய்தது எனலாம்.

தொடரும்....

இரா.தனராஜ்,
உதவி விரிவுரையாளர், நடனத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழி தினம் சில சிந்தனைகள்

நம் மொழியின் தனித்துவம் பேசுவோம்
பிறமொழிகளின் தனித்துவத்தையும்
போற்றுவோம்

உலக தாய்மொழி தினத்தை தமிழ் மொழி தினமாக கொண்டாடி மகிழ்ந்து போயிருக்கிறார்கள் தமிழ் மக்கள். தமிழுணர்ச்சியை இளம் சிறார் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் கொண்டு செல்வதாகவும் தமிழ் இசையை முன்னெடுப்பதாகவும் தமிழுக்குத் தொண்டு செய்வோரை பாராட்டுவதாகவும் சில முன்னெடுப்புகள் நடந்துமுள்ளன. வெளியில் கொண்டாட முடியாதவர்கள் வீட்டில் கொண்டாடி மகிழ்ந்து அவற்றை தமது முகநூலில் பதிந்துமுள்ளனர்.

மகிழ்ச்சிகரமாகவும் உணர்ச்சிகரமாகவும் ஒருநாள் கழிந்துள்ளது. அது மிகவும் நல்லதே தமிழ் மொழியின் பெருமையை மேலும் மேலும் உரக்கச் சொல்வதாகவும் ஆரவாரமாகவும் முடிந்திருக்கிறது உலக தாய் மொழி தினம். உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு உணர்ச்சி கரமான எழுத்துகளும், கொண்டாட்டங்களும், முக்கியமாகத் தமிழர் மத்தியிலிருந்து வந்தன என முகநூல் பதிவுகள் காட்டி நிற்கின்றன

அதற்கான ஒரு சமகாலத் தேவையுமுண்டு. அதனை நாம் புரிந்து கொள்ளலாம் ஏனைய மொழியினரும் முக்கியமாக அடக்கப்படும் சிறுபான்மை மொழி பேசுவோரும் கூட இத்தினத்தைக் கொண்டாடியிருப்பார்கள்

முதலில் இந்த உலகதாய்மொழி தினம் என்ன என்பதனையும் அது ஏன் ஐக்கிய நாடுகள் சபையினால் ஒரு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது என்பதையும் அதன் நோக்கம் என்ன என்பதனையும் பார்போம்

## உலகத் தாய்மொழி தினம் தோன்றிய வரலாறு

பாகிஸ்தான் 1947 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. கிழக்கில் இஸ்லாமியர் அதிகமாக வாழ்ந்த கிழக்கு வங்காளமும் இந்தியாவின் , மேற்கில் இஸ்லாமியர் வாழ்ந்த பாக்கிஸ்தானும் இணைக்கப்பட்டன. இவ்வண்ணம் மத,( இஸ்லாம்) இன (முஸ்லிம்கள்) அடிப்படையில் இரு வெவ்வேறு பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு பாக்கிஸ்தான் எனும் ஒரு நாடு உருவாக்கப்பட்டது.

மேற்கு பாகிஸ்தான் மக்கள் மொழி உருது. கிழக்கு பாகிஸ்தான் மக்கள் மொழி வங்காளம். 1948 ஆம் ஆண்டின் அப்போதைய பாக்கிஸ்தான் அரசு உருது மொழியை பாக்கிஸ்தானின் ஒரே தேசிய மொழியாக அறிவித்தது.

இதற்கு கிழக்கு பாக்கிஸ்தான் மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வங்காள மொழி வளர்ச்சி பெற்ற மொழியாகவும் இலக்கிய வெளிப்பாட்டு மொழியாகவும் இருந்தமையினால் வங்காள மொழி பற்றிய பெருமித உணர்வு வங்காள முஸ்லிம் மக்களிடம் இருந்தமையுமொரு காரணமாகும்.

வங்காள மொழி பேசிய இந்த கிழக்கு பாக்கிஸ்தான் மக்கள் அவர்களது தாய் மொழியான வங்காள மொழியைக் குறைந்தபட்சம் தேசிய மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்று கோரினார்கள். பாக்கிஸ்தான் உருதுமொழி அரசு அதனைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை

பிறகென்ன?

மொழிப் போராட்டம் வெடித்தது. டக்கா பல்கலைக்கழக மாணவர்கள் பொது மக்களின் ஆதரவுடன், பாரிய பேரணிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். போராட்டத்தை முடக்குவதற்காக பாக்கிஸ்தான் அரசாங்கம் பொதுக் கூட்டத்தையும் பேரணிகளையும் தடை செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையை மீறி மாணவர் ஊர்வலம் நடத்தினர் அடக்குமுறை அரசு மாணவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இது நடந்தது 1952 ஆம் ஆண்டுபிப்ரவரி 21 ஆம் திகதி.
காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் சலாம், பர்கட், ரபீக், ஜபார், ஷபியூர் ஆகிய மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

தாய்மொழிக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த இந்த சம்பவம் வரலாற்றில் பதியப்பட்ட அரிய சம்பவங்களில் ஒன்றாகும்.
அவர்கள் இஸ்லாம் மதத்தினராயினும் தமது தாய் மொழியாக வங்காள மொழியையே வரித்திருந்தனர்.

அன்றிலிருந்து வங்காளதேசத்தினர் பன்னாட்டு தாய்மொழி தினத்தை துக்க நாளாக அனுஷ்டிக்கின்றனர். உயிர்நீத்த தியாகிகளை கௌரவிப்பதற்காக ஷாஹித் மினார் நினைவு சின்னத்திற்கு சென்று தியாகிகளுக்கு தங்கள் ஆழ்ந்த துக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்கின்றனர்.

வங்காள தேசத்தில் பன்னாட்டு தாய்மொழி தினம் தேசிய விடுமுறை தினமாகும். 1998 ஆம் ஆணடில் கனடாவில் வசிக்கும் வங்காள தேசத்தினரான ரபீகுல் இஸ்லாம் என்பவர் அன்றைய ஐ.நா பொதுச் செயலாளரான கோபி அன்னானுக்கு உலக மொழிகளை அழிவிலிருந்து காப்பாற்ற பன்னாட்டு தாய்மொழி தினத்தை அறிவிக்குமாறு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

டக்கா படுகொலைகளை நினைவுகூரும் வகையில் பிப்ரவரி 21 ஆம் திகதியை பன்னாட்டு தாய்மொழி தினமாக அறிவிக்க வேண்டுமென முன்மொழிந்தார்.

இப்படி, தமது தாய் மொழிக்காகத் தம்முயிர் ஈந்த அந்த இஸ்லாமிய மாணவரே இதன் விதைகளாவர். அந்த விதைகளே இன்று விருட்சங்களாக முளைத்துள்ளன. உலமெங்கணும் தாய்மொழி தினம் கொண்டாடப் படுகின்றது

## பிரகடனமும் நோக்கமும்

1999 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பண்பாட்டு நிறுவனம் இந்நாளை அனைத்து உலக தாய்மொழி தினமாக அறிவித்தது. அப்படி அறிவித்த போது அந்நாளின் நோக்கையும் தெளிவாகக் கூறியிருந்தது.

தனித்துவம் பேணுதலும் மற்றவரைப் புரிந்து கொள்ளலும்

பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேணுதலுடன் அவற்றிற்கிடையே ஒற்றுமையையும் உருவாக்குதலுமே அந்த தினத்தின் நோக்கம் ஆகும்.

இந்த விழா 2000 ஆம் ஆண்டு முதல் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. 2013 இல் யுனெஸ்கோ தாய்மொழி நூல்களும் எண்ணிம பாட நூல்களும் என்றவோர் கருத்தரங்கையும் நடத்தியது. இந்தப் பெரு நோக்கம், அதாவது பல்வேறு சமூகங்களின் மொழிப்பண்பாட்டுக்கிடையே ஒற்றுமையை உருவாக்குதல் எனும் உயரிய நோக்கம், இந்த தாய்மொழி நாளில் நிறைவேற்றப்படுகிறதா? என்பது கேள்விக்குரியது.

ஒவ்வொரு மொழியும் அது செம்மொழியாயினும் செம்மையற்ற மொழி ஆயினும் அது அது அதனளவில் சிறப்புடையதே. தன்னளவில் பலம் உடையதே மனிதரில் ஏற்றத் தாழ்வு இல்லை என்பதுபோல மொழிகளிலும் ஏற்றத் தாழ்வு இல்லை. இந்த மொழிச்சமத்துவ மனோபாங்கை உலக மக்கள் அனைவரிடமும் கொண்டு வருவதே இந்த நாளின் உயிர் நாடியாகும்.

## தாய்மொழிக்கல்வி கற்பிக்கும் நாடுகள் சில

பின் வரும் நாடுகளிலே அவ்வந்நாட்டின் தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்படுகின்றது

அமரிக்கா -ஆங்கில மொழி
ஐக்கியராச்சியம்- ஆங்கில மொழி
ஜேர்மனி -ஜேர்மானிய மொழி
பிரான்ஸ் -பிரான்சிய மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனா- சீனமொழி
ஜப்பான்- ஜப்பானிய மொழி
நோர்வே -நோர்வீஜியன் மொழி
தென் கொரியா - கொரிய மொழி
ஐக்கிய அரபு எமிரேட்- அரபு மொழி
குவைத் -அரபுமொழி
பின்லாந்து- சுவீடிஸ் மொழி
கியூபா -கியூபன் ஸ்பானிஷ்

மொழி, பேசுவதற்கான ஊடகம் மாத்திரமல்ல அது பண்பாட்டின் குறியீடுமாகும் தாய்மொழியில் கல்வி பயிலுதல் மிக அவசியமாகும். மொழி என்பது பேசுவதற்கு தொடர்புகொள்வதற்கான கருவி மாத்திரமன்று அது ஒரு பண்பாட்டின் குறியீடு என்பதுடன் அது அச்சமூகத்தின் சிந்தனையின் குறியீடுமாகும். தாய்மொழியில் பயின்றதனால் ஒவ்வொரு நாடுகளும் கண்டு பிடித்த கண்டு பிடிப்புகளின் தன்மையினை கீழ் வரும் அட்டவணை விளக்கும்.

அமெரிக்கர் 447 கண்டு பிடிப்புகள்
சீனர் 201 கண்டு பிடிப்புகள்
ஜேர்மானியர்- 201 கண்டுபிடிப்புகள்
ரஸ்யர் - 276 கண்டு பிடிப்புகள்
இந்தியர் - 57 கண்டுபிடிப்புகள்( அதுவும் ஆங்கிலேயர் வருமுன்)

ஆங்கிலம் கல்வி மொழியாக இந்தியாவுக்கு வராத காலத்தில்தான் இந்திய தாய் மொழிகள் பெரும் சாதனைகள் புரிந்திருந்தன, மேற்கு புகுத்திய நவீனம் வருவதற்கு முன்தான் இந்தியாவில் தத்தம் மொழிபேசிய இந்திய மக்கள் தத்தம் மொழியில் சிந்தித்து உலகம் வியக்கும் கட்டிடங்கள் கட்டினர். விஞ்ஞானம் கண்டு பிடித்தனர், போர்க்கலை, வைத்தியம், வானசாஸ்திரம், ஆட்சிக்கலை (அரசியல்) சிற்பம், ஓவியம், இசை, இலக்கணம், இலக்கியம், தத்துவ உரையாடல், இன்பம் , நடனம் ஆகியவற்றில் பெரும் அறிஞர்களாக வலம் வந்தனர். தத்தம் தாய்மொழியில் சிந்தித்தமயினாலேயே இது அவர்களுக்குச் சித்தியாயிற்று, தமிழர்களும் அவ்வகையில் பெருமொழியும் பெரும் பாரம்பரியமும் கொண்ட ஓர் இனம் ஆகும் உலகில் செம்மொழிகளாக 6 மொழிகளைக்குறிப்பிடுவர்,

அவையாவன
தமிழ்,
சீனம்,
சமஸ்கிருதம்,
கிரேக்கம்,
லத்தீன்,
ஹிப்ரு.

இவற்றுள் முன்னைய இரு மொழிகளான தமிழும் சீனமும் பண்டுதொட்டு இன்றுவரை வழக்கிலிருந்து வருபவை. அதனால் அவை வழக்கொழியாச் செம்மொழிகளாயின. சீன தமிழ் உறவு பண்டு தொட்ட உறவு என்பதனைபலரும் அறியார். சீனமும் தமிழும் தவிர ஏனையவை வழகொழிந்தவை.

ஹீப்ருவை யூதர் வாழும் மொழியாக்க உழைக்கின்றனர். இந்தப் பின்னணியில் நாம் உலகத் தாய்மொழி தினத்தை அணுகுதலும் புரிதலும் செயற்படலும் பயனுள்ள செயற்பாடாக அமையும்.

தமிழ் மொழி என்றவுடன் அதன் இலக்கண இலக்கியங்கள், அது கூறும் சமயம் பண்பாடு என்ற கருத்துருவே நம் முன் எழுகின்றது மொழி ஒரு சமூகத்தின் வெளிப்பாடு சமூகம் இன்றி மொழியில்லை. சமூகத்தின் தேவைகள் அச்சமூகத்தின் பண்பாட்டை நிணயிக்கின்றன,

அவற்றின் கூட்டுமொத்த குறியீடாக மொழி மேற்கிளம்புகிறது. ஏன் மொழி வழக்கு காலம்தோறும் மாறுகிறதெனில் சமூகம் மாறுகிறது எனவே மொழியும் மாறுகிறது என நாம் விடைகூறலாம். பிறபண்பாட்டுக் கலப்பும் மொழியில் மாற்றங்களைகொணரும்.

மிக வலிமையான பண்பாட்டில் கட்டி எழுப்பப்படும் ஒரு மொழி பிறபண்பாடுகளோடு கரைந்து விடாது. அவற்றைத் தன் வயமாக்கி வலிமைபெற்று மேலெழுந்து நிற்கும் தமிழ் மொழிக்கும் சீன மொழிக்கும் இப்பண்பு இருந்தமையினாலேதான் இவை இரண்டும் அறாது தொடர்ந்தும் நிலைத்து நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி சந்தித்த முப் பெரும் மொழிகளும் பல பண்பாடும்

மூன்று பெரும் மொழிகளையும் பல பண்பாடுகளையும் சந்தித்த மொழி தமிழ் மொழி.

ஒன்று கி.பி இருந்து வேகமாக ஊடுருவிய ஆரியப்பண்பாடும் சமஸ்கிருத மொழியும் இரண்டு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த அராபிய மொழியும். இஸ்லாம் இன்னொன்று. கி.பி 18 ஆம் நூற்றாண்டுக்குபின் ஊடுருவிய ஐரோப்பியப் பண்பாடும் ஆங்கில மொழியும் இப்போது அம்மொழி பலமொழிகளையும் பல பண்பாடுகளையும் அத்தோடு மிக நவீன தொழில் நுட்ப பண்பாட்டையும் சந்திக்கிறது.

சமஸ்கிருத மொழியையும் அப்பண்பாட்டையும் தன் வயமாக்கிகொண்டும் அராபிய மொழியையும் அப்பண்பாட்டையும் தன் வயமாக்கிகொண்டும் ஐரோப்பிய பண்பாட்டையும் ஆங்கில மொழியையும் தன் வயமாக்கிகொண்டும் குன்றாத இளமையுடன் இன்றும் உள்ள இம்மொழி, நவீன சவாலையும் எதிர்கொண்டு மேலும் செல்லும் என்பது நமது எதிர்பார்ப்பு.

## திராவிட மொழிக் குடும்பமும் தமிழும்

திராவிட மொழிகளில் கால்ட்வெல் ஆராய்ந்த போது தான் தமிழ் மொழியின் தனித்துவம் உலக அரங்கில் தெரிய வந்தது. அதுவரை அது சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த மொழி என்ற கருத்துருவே பெரும்பாலும் நிலவியது. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணமும் 19ஆம் நூற்றாண்டில் அச்சில் ஏறிய தமிழின் இலக்கண இலக்கிய சமய நூல்களும் இக்கூற்றைப் பொய்யாக்கின

திராவிட மொழிகளுள் திருந்திய மொழிகளாக தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் ஆகியவற்றையும் திருந்தாத மொழிகளுள் சில மொழிகளையும் எடுத்துக்காட்டினார் கால்டுவெல். இவற்றுள்

தெலுங்கு 7 கோடி 50 லட்சம் மக்களாலும்
தமிழ் 7 கோடி 80 லட்சம் மக்களாலும்
கன்னடம் 3 கோடி 80 லட்சம் மக்களாலும்
மலையாளம் 3 கோடி 80 லட்சம் மக்களாலும்
பேசப்படுகிறது என அறிகிறோம்.

தமிழ் மொழி எழுத்து கண்டு இலக்கியம் கண்டு வளர்ந்த மொழி ஆனால் தமிழ் நாட்டில் எழுத்து காணாது பேச்சில் இருக்கும் தமிழ் மொழியும் உள்ளது.

இதனை நாம் புராதன தமிழ் மொழி என அழைப்பதில் தவறில்லை. இதில் தமிழ் நாட்டில் படுகமொழி 4 லட்சம் பேராலும் குறும்பர் மொழி 2 லட்சத்து 20 ஆயிரம் பேராலும் காணிக்காரர் மொழி 19000 பேராலும் இருளர் மொழி 14500 பேராலும் தோடர் மொழி 1100 பேராலும் கோத்தர் மொழி 900 பேராலும் பேசப்படுகிறது என ஒரு புள்ளி விபரம் காட்டுகிறது.

இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் தமிழ் மொழியின் கிளை மொழிகள் பேசும் குழுவினர் தமிழர் மத்தியில் உள்ளனர் என்பதே. அம்மொழிகள் அவர்களின் தாய் மொழிகளே. அவர்கள் அம்மொழியிலேயே சிந்திப்பர். அம்மொழி அவர்களின் பண்பாட்டு மொழியுமாகும். தாய்மொழிதினம் கொண்டாடும் நாம் இவர்களின் மொழியையும் புரிந்து கொள்ள வேண்டும் கொண்டாடவும் வேண்டும். அதுவே தாய்மொழி தின கொண்டாட்டமுமாகும். இலங்கையிலும் புராதன குடிகளிடமும் தமிழ் பேசும் வழக்கமுண்டு, கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் வேடரிடம் இதனைக்காணுகின்றோம். அவர்கள் பேசும் மொழியும் ஒரு வகையில் இலங்கைத் தமிழ் மொழியே. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ்மொழி, தமிழ் நாட்டின் அரசியலிலும் இலங்கை அரசியலிலும் மொழியுணர்வு பிரதான பங்கு வகித்து வந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் இந்தித்திணிப்பை எதிர்த்தும் இலங்கையில் சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்தும் நடத்தப்பட்ட போராட்டங்களில் தமிழ் இளைஞர்கள் தம் உயிர் இழந்தனர், உடமை இழந்தனர்
இரு நாடுகளிலும் அவர்கள் தமிழுணர்ச்சி பெற்றனர்.
தமிழ் உணர்ச்சியினடியாகத் தமிழை அணுகினர்
பல மொழிப்போராட்டங்களை இரண்டு நாட்டுத்தமிழர்களும் எதிர்கொண்டனர்.
இதனால் அறிவு ரீதியாக மொழியை அணுகும் நிலை மாறி உணர்ச்சி பூர்வமாக மொழியை அணுகும் போக்கும் உருவானது

தமிழுணர்ச்சி அரசியலும் தமிழ் உணர்ச்சி எழுத்துகளும் அதிகமாக வரத் தொடங்கின.
தமிழை உணர்வு ரீதியாக அணுகும் போக்கே அதிகமானது.
அது காலத்தின் தேவை போலவும் இருந்தது.
பட்டிமன்றங்களும் , பேச்சு மேடைகளும் தமிழ் விழாக்களும் எரியும் தமிழுணர்ச்சிக்கு மேலும் எண்ணை வார்த்தன, உரமூட்டின.
மனிதர் அறிவு ஜீவியா? உணர்வு ஜீவியா? என ஓர் வினா எழுப்பினால் அதற்கான பதில் முதலில் அவர்கள் உணர்வு ஜீவிகள்.
பின்னரே அறிவு ஜீவிகள் என்பதுவேயாகும்.
உணர்ச்சி ஜீவித்தனம் பலவற்றை மறைத்து விடும்,
நம்மொழியே சிறந்த மொழி ஏனையவை எம்மிலும் தாழ்ந்த மொழி எனும் மனோபாங்கைக் கொண்டு வந்து விடும்.
மொழி வெறியும் தோன்றிவிடும்.
அறிவு ஜீவித்தனம் உண்மையை வெளிகொணரும்.
மொழிகளை அறியவும் தமிழ் மொழியை ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவுமான பக்குவத்தைக் கொடுக்கும்.

தாய்மொழி தினத்தில் நம் மொழியின்
தனித்துவம் பேசுவோம்.
பிறமொழிகளின் தனித்துவத்தையும்
போற்றுவோம்.
எழுத்துமொழியின்றி பேச்சுமொழியில்
மாத்திரம் இருக்கும் மொழிகளுக்கும்
சமத்துவமளிப்போம்.
அம்மொழி பேசுவோரின் பண்பாட்டையும்
பேணுவதற்கு உதவுவோம்.
சர்வதேச தாய் மொழி தினத்தை
உருவாகியோரின் நோக்கமும் இதுவேயாகும்.
நமது நோக்கமும் அதுவே ஆகுக.



**பேராசிரியர் சி.மௌனகுரு,**
**முன்னாள் கலைப்பீடாதிபதி,**
**முகாமைத்துவச் சபை உறுப்பினர்,**
**சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக் கழகம்,**
**மட்டக்களப்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத்துறையில் இடம்பெற்ற உலகத் தாய்மொழி தினம்



யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையில் 21.02.2021 அன்று உலகத் தாய்மொழி தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இசைத் துறையின் தலைவர் செல்வி பரமேஸ்வரி கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நான்காம் ஆண்டு மாணவர்களின் அரங்க நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராய்க் கலைக்கோவில் நடனப் பள்ளியின் பரத அரங்கேற்றம்



உரும்பராய்க் கலைக்கோவில் நடனப்பள்ளியின் அதிபர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களின் மாணவிகளும் திரு திருமதி பகீரதன் விஜிதா தம்பதியரின் மகள்களும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் ஒன்பதாம் ஆண்டு மாணவிகளுமான அஞ்சனா, ஆராதனா ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் 20.03.2021 அன்று மாலை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரிக் கலையரங்கில் இனிதே நடைபெற்றது.



இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திரு கே.மகேசன் அவர்கள் கலந்து கொண்டார். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருமலை வளாகப் பணிப்பாளர் பேராசிரியர் வி.கனகசிங்கம், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாரதி கெனடி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மு.ரஞ்சினிதேவி, யாழ்.பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தி முரளீதரன், கொக்குவில் கலாபவனத்தின் அதிபர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன், திலகநர்த்தனாலயா அதிபர் திருமதி யசோதரா விவேகானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கலாபூசணம் பத்மினி செல்வேந்திரகுமார் அவர்கள் நட்டுவாங்கக் கலைஞராகவும் திரு.தவநாதன் றொபேட் அவர்கள் குரலிசையாளராகவும் திரு சி.துரைராசா அவர்கள் மிருதங்கக் கலைஞராகவும் திரு.அ.ஜெயராமன் அவர்கள் வயலின் கலைஞராகவும் அணி செய்தனர்.

இவ்வரங்கேற்றத்தில் புஸ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், கௌத்துவம், பதவர்ணம், கீர்த்தனை, குறத்தி நடனம், தில்லானா போன்ற உருப்படிகள் இடம்பெற்றன. இவற்றுள் வசாவிளான் தவமைந்தன் அவர்களின் புஸ்பாஞ்சலியும் நல்லைக் கந்தன் மீதான பதவர்ணமும் இயலிசைவாரிதி ந.வீரமணி ஐயர் அவர்களின் கீர்த்தனையும் ஈழத்து உருப்படிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.



செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ்வரங்கேற்றம் சேகர் ஒலியமைப்பிலும் வானவில் ஒளி, காணொளிப் பதிவிலும் சிறப்புற இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்

**ஒரு வரலாற்றுச் சமூகப் பார்வை**

## முருங்கன் பிரதேசம்

இலங்கையில் மன்னார் மாவட்டத்தின் 'மாதோட்டம்' என்ற பட்டினம் திருக்கேதீச்சரம் என்ற இடத்தை அடுத்துள்ள மாந்தை என்ற கிராமத்தையும் அக்கிராமத்தைச் சுற்றியுள்ள சில சிற்றூர்களையும் உள்ளடக்கியதாக விளங்கியிருக்கிறது. ஆயினும், மாதோட்டம் என்ற சொல் இப்போது மன்னார் மாவட்டத்தின் பெருநிலப்பரப்பை குறித்து நிற்கிறது இம்மாதோட்டத்தின் ஒரு பகுதியே முருங்கன் பிரதேசமாக விளங்குகிறது.

பண்ணைவெட்டுவான், இசைமாலைத்தாழ்வு, செட்டியார் மகன் கட்டையடம்பன், மடுறோட் கட்டையடம்பன், தம்பனைக்குளம், கற்கிடந்தகுளம், இரட்டைக்குளம், சுண்டிக்குளி, பிச்சைகுளம், சிறுக்கண்டல், பரிகாரிகண்டல், ஜீவநகர், மருதமடு, கல்நாட்டி, கூமாப்பற்று, பள்ளக்கமம், களிமோட்டை, பொன்தீவுகண்டல், மாவிலங்கேணி, பிடாரிகுளம், பூவரசங்குளம், ஆத்திக்குளி, மாளிகைத்திடல், செம்மண்தீவு போன்ற 25க்கு மேற்பட்ட சிறு கிராமங்களை உள்ளடக்கியதாக முருங்கன் பிரதேசம் திகழ்கிறது. முருங்கன் குளத்திற்கு அருகில் புனித சந்தியோகுமையோர் ஆலயத்தை மையமாகக் கொண்ட பகுதியே முருங்கன் கமம் என்று கொள்ளப்படுகிறது.

பல்லாண்டு காலமாக கலைகள் செழிப்புற்று விளங்கிவருகிற பிரதேசமாக மாதோட்டத்தில் முருங்கன் பிரதேசம் திகழ்கிறது. வயல்களால் சூழப்பட்ட முருங்கன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களான அமரர் மரியான் சந்தான் புலவர், அமரர் சந்தான் பாவிலு (சீனிப் புலவர்), அண்ணாவியார் அமரர் மரியான் செபஸ்தியான், சுண்டிக்குழியைச் சேர்ந்த அமரர் கபிரியேல் புலவர், வருண குலசிங்கம், தொன் சுவாம் அந்தோனிப் புலவர், அந்தோனி பிலிப்பு நேரிசு, பண்ணைவெட்டுவான் நீக்கிலாப்பிள்ளை புலவர், மரிசாற் புலவர். கற்கிடந்த குளத்தைச் சேர்ந்த சேர்ந்த அமரர்களான ஆதித்த நாடார், மனுவேல், பிறஞ்சி சம்பாய்வ, ஆதித்த நாடார் மனுவேல் மடுத்தீன், ஆதித்த நாடார் மடுத்தீன் எபிலோனியா, சூசைப்பிள்ளை தொம்மை, தொம்மை பாக்கியநாதன், அந்தோனி சில்வா பிறான்சிஸ், அந்தோனி சில்வா, பிலிப்பு சில்வா, ஆனுப்பிள்ளை, மடுறோட் கட்டையடம் பனைச் சேர்ந்த அண்மையில் காலமான அலஸ் அண்ணாவியார், இசை மாலைத்தாழ்வு செ.பிலிப்பு (சிங்கராசா) அண்ணாவியார், முருங்கன் கமத்தினைச் சேர்ந்த கலைத்தவசி கலைஞர் குழந்தை செபமாலை போன்றவர்கள் நம் தேசியக் கலைவடிவமான நாட்டுக்கூத்துக் கலைக்கு அணிசேர்த்த, சேர்க்கின்ற முருங்கன் பிரதேசத்தைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க புலவர்களாகவும் அண்ணாவிமார்களாகவும் நாடக நெறியாளர்களாகவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக் கலைஞர்களாகவும் மிளிர்ந்தவர்கள் ஆவர்.

## புனித யாகப்பர் நாடகமன்றம்

புனித யாகப்பர் (சந்தியோகுமையோர்) ஆலயச் சூழலிலேயே குழந்தை செபமாலை அவர்கள் 18 வயது இளைஞனாக 1958ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 1ஆம் நாள் "புனித யாகப்பர் நாடகமன்றம்" என்ற பெயரில் கலைமன்றம் ஒன்றினை ஆரம்பித்து கலைப் படைப்புக்களை நிகழ்த்தி வந்தார். இம்மன்றத்தின் தலைவராக மன்றத்தின் நிறுவுனர் குழந்தை செபமாலை அவர்களும், செயலராக திரு.க.லியாகத் அலிகான் அவர்களும், பொருளாளராக திரு.எஸ்.ஐயசேன அவர்களும் ஆரம்பகால நிர்வாகிகளாக கடமையாற்றி இருக்கிறார்கள்.

1961ஆம் ஆண்டு புனித யாகப்பரின் வாழ்க்கை வரலாற்றைப் பாடுபொருளாகக் கொண்ட 'நல்வாழ்வு' என்ற நாடகத்தை இம்மன்றம் சுமார் 40 நடிகர்களைக் கொண்டதாக முதன் முதலாக மிகப் பிரமாண்டமான செம்மண்தீவில் அன்று இருந்த படமாளிகை அரங்கில் அரங்கேற்றம் செய்தது குறிப்பிடத்தக்கது.

புனித யாகப்பர் ஆலயச் சூழலில் 'யாகப்பர் நாடகமன்றம்' உருப்பெற்றாலும், இந்து இஸ்லாமிய சகோதரர்களும் ஏனைய கிராமத்து மக்களும் இம்மன்றத்தில் இணைந்து கொண்டதனால் 1958 தொடக்கம் 'புனித யாகப்பர் நாடகமன்றம்' என்று அழைக்கப்பட்டு வந்த மன்றத்தின் பெயரை 1964ஆம் ஆண்டு தொடக்கம் 'முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் என்ற புதிய பெயராக மன்றத்தின் நிறுவுனர் மாற்றினார். ஒருமைப்பாட்டையும் பொதுமையையும் கொண்டிருக்கவேண்டும் என்ற உயர்ந்த, பரந்த நோக்குடன் மன்றத்தின் பெயர் மாற்றத்தை நிறுவுனர் மேற்கொண்டிருந்தார். ஆக, 'முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்' ஆரம்பித்து இற்றைக்கு 57 ஆண்டுகளானாலும் இம்மன்றத்தோடு இணைந்த வரலாறு உண்மையில் 63 ஆண்டுகளைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கிறது.

## இன, மத, சமூக ஒருமைப்பாட்டை வளர்த்த மன்றம்

இன ஒற்றுமைக்கும் மத நல்லிணக்கத்திற்கும் சமூகங்களுக்கிடையிலான சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் தொடக்கத்திலிருந்தே முன்னுதாரணமாகத் திகழ்ந்திருக்கிறது. மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களாக முஸ்லிம் சகோதரரான க.லியாகத் அலிகான், சிங்கள சகோதரரான எஸ்.ஐயசேன, இந்து சகோதரரான எஸ்.சுந்தரராசா, அயல் கிராமமாகிய இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்து திரு.செ.சிங்கராசா, காத்தான்குளத்தைச் சேர்ந்த ஆசிரியர் சீ. இம்மானுவேல், திரு. சீ. சவுந்தரநாயகம் போன்றவர்கள் இணைந்துகொண்டதன் மூலம் இம்மன்றத்தின் பொதுமைப் போக்கும் பரந்த நோக்கும் புலப்படுகிறது.

மேலும், இம்மன்றத்தின் கலை நிகழ்வுகள் இன, மத வரையறைகளைக் கடந்த நிலையில் ஆற்றப்பட்டிருக்கிறது என்பதனை இம்மன்றம் ஆற்றுகை செய்த பொது மேடைகள், திறந்தவெளி அரங்குகள், கத்தோலிக்க ஆலயங்கள், மெதடிஸ்த ஆலயங்கள், இந்துக் கோவில்கள், முஸ்லிம் கிராமங்கள் ஆகியவற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம். அத்துடன் பல்வேறுபட்ட இதிகாச, இலக்கிய, வரலாற்று, சமய கதைகள், சமூகப் பிரச்சினைகள், சமுதாயத் தேவைகள் இக்கலை நிகழ்வுகளின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

## நாடகப் பொற்காலம்

"1965, 70களில் நாடக வரலாற்றில் மன்னார் மாதோட்டத்திற்கு ஒரு பொற்காலம்! இக்காலத்தைப் போல மன்னார் மாதோட்டத்தில் வேறு எக்காலத்திலும் நாடகங்கள் நடைபெறவில்லை.

வேறென்ன? எங்களுக்கு ஒவ்வொரு நாளும் நாடகமாக இருக்கும் அல்லது நாடகப் பழக்கமாக இருக்கும்!" எனக் குழந்தை செபமாலை குறிப்பிடுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்ன காலப்பகுதியில் நானாட்டான் பிரதேச செயலராக இருந்த திரு. அ. சொக்கலிங்கம், மன்னார் அரச அதிபராக இருந்த திரு. தேவநேசம் நேசையா, இலங்கை கலைக்கழகத் தமிழ்ப் பிரிவிற்குப் பொறுப்பாகவிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோர் கலையார்வம் மிக்கவர்களாகப் பாரம்பரிய கலைகளைக் குறிப்பாக நாட்டார் கலைகளை வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் ஆவார்.

இம்மூன்று பேரும் மன்னார் மாதோட்டத்தின் பல பகுதிகளில் நாடக விழாக்களை நடத்தி, புலவர்கள் அண்ணாவிமார்களைக் கௌரவித்து, எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் போன்ற நாடகங்களை அச்சிட்டு கிராமங்களில் ஆடப்பட்ட பாரம்பரிய நாட்டுக்கூத்துக் கலைக்கு படித்தோர் மத்தியில் அங்கீகாரம் பெற்றுக் கொடுத்ததோடு மன்னார் மாதோட்ட நாட்டுக்கூத்துக் கலையை நாடறியச் செய்தவர்களுள் முக்கியமானவர்கள் எனலாம். இவர்களின் காலத்திற்கு முன் அதாவது சுமார் 1960களுக்கு முன்னர் மன்னார் மாதோட்ட நாட்டுக்கூத்துக்கள் மன்னார் மாவட்டத்திற்கு வெளியே பெரிய அளவில் ஆற்றுகை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இக்காலப் பகுதியில்தான் முருங்கன் செம்மண்தீவிலும், 1964இல் அடம்பன் நகரிலும், 1966இல் மன்னார் நகர் போன்ற இடங்களிலும் திறந்தவெளி கலையரங்குகள் அமைக்கப்பட்டன. அவ்வளவிற்கு மன்னார் மாதோட்டமெங்கும் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டன என்பதற்கு இது ஒரு சான்று. செம்மண்தீவு திறந்தவெளி கலையரங்கு அமைக்கப்பட்டபோது, "வேறென்ன! இவன் குழந்தைக்காகத்தானே செம்மண்தீவு அரங்கை ஒதுக்குகிறார்கள்!" என்று சிலர் வெளிப்படையாய்ப் பேசியதும் உண்டு. அந்தளவிற்கு நாடகங்களும் நாட்டுக்கூத்துக்களும் மன்னார் மாதோட்டத்தில் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட முருங்கன் செம்மண்தீவு, அடம்பன் நகர், மன்னார் நகர் திறந்தவெளி அரங்குகள் இன்றும் அழியாமல் இருப்பதுடன் தற்போது இத்திறந்த வெளியரங்குகள் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றமும் மேற்சொன்ன கலைப்பிரியர்களுடன் குறிப்பாக பேராசிரியர் சு. வித்தியானந்தன், நானாட்டான் பிரதேச செயலராக இருந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அ. சொக்கலிங்கம், மன்னார் அரச அதிபராக இருந்த திரு. தேவநேசம் நேசையா அவர்களுடன் உறவைப்பேணி மன்னார் மாதோட்டத்தில் முருங்கன், செம்மண்தீவு, மறிச்சுக்கட்டி, நானாட்டான், அடம்பன் போன்ற இடங்களிலும் ஏனைய மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் நாடக ஆற்றுகைகளை பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் நிகழ்த்தி, பல போட்டிகளில் பங்கேற்று,



பாரம்பரியத் தேசியக் கலை வடிவமாகிய நாட்டுக்கூத்தினைப் பல திறத்தாரும் தரத்தாரும் பார்த்து இரசிக்கச் செய்திருக்கிறது.

குழந்தை செபமாலை இம்மன்றத்தின் ஊடாக ஆற்றிய கலைப் பணிக்காக 1982ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 27ஆம் நாள் மன்/முருங்கன் மகா வித்தியாலய அதிபர் அமரர் எஸ்.வேதநாயகம் அவர்களின் தலைமையில் முருங்கன் பாடசாலை அபிவிருத்தி சபையினரால் மிகப் பிரமாண்டமான அளவில் பாராட்டு விழா ஒன்று எடுக்கப்பட்டு 'கலைஞர் குழந்தை' என்ற கௌரவப்பட்டமும் கொடுக்கப்பட்டது. இப்பாராட்டு விழாவானது முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்திற்கும் அதன் நிறுவுனருக்கும் அமைந்திருக்கிறது. முருங்கன் பிரதேசத்து மக்கள் கொடுத்த ஆதரவின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றது.

**கனவுகள் நனவாகின்றன**

பொருளாதார கஸ்ரம், நோய்நொடிகள், ஆட்பலம் போதாமை, போர்க்கால சூழல் போன்ற நெருக்கடிகளின் மத்தியிலும் தன் கண்ணின் மணிபோல கலாமன்றத்தினைத் காத்து வந்திருக்கிறார் மன்றத்தின் நிறுவுனர் குழந்தை செபமாலை.

குறிப்பாக, 1990களில் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட மோதல்களின் போது நாடகப் பொருட்களான உடுப்புமுடிகள், 'கார்மோனியம்', மத்தளம், நாடகக் கொப்பிகள் போன்றவைகளை இடப் பெயர்வின்போது கட்டுக்கரைக்குளம், தம்பனைக்குளம், மடுத்திருத்தலம் போன்ற இடங்களுக்குக் காவிச்சென்று பாதுகாத்தமையும் இவ்விடங்களில் சில ஆண்டுகள் வாழ்ந்தபோது சிறிய அளவிலான கலைநிகழ்வுகளை தொடர்ந்து நிகழ்த்தியதும் குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டு ஆடித்திங்களில் குழந்தை செபமாலை மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டும், இற்றைவரை தன் அர்ப்பணத்தாலும் பல்வேறுபட்ட தியாகத்தாலும் ஆன்ம பலத்தாலும் இம்மன்றத்தின் இயக்கத்திற்கு உரமூட்டி, உற்சாகமூட்டி வருகிறார்.

கலைகளின் வழியாக இறைபுகழ் பாடுதல் ஒரு பகுதியாக விளங்க மறு பகுதி இவரின் நீண்டகாலக் கனவுகளான சமூக சமத்துவம் பெறுதல், பெண் விடுதலை அடைதல், சமூகங்களுக்கு இடையேயான ஒற்றுமை - ஒருமைப்பாடு பேணுதல், கல்வியில் மேம்பாடு காணுதல், சமூதாய வளர்ச்சி போன்றவைகளை நிறைவேற்றிக் கொண்டும் அவற்றின் இலக்கை அடைவதையும் மன்றத்தின் ஊடாக முன்னெடுத்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையாக ஊன்றப்பட்ட மன்றம் வேர்விட்டு விருட்சமாகி பலவகைப் பறவைகளுக்கும் சரணாலயமாக மாறி இருப்பதை இம்மன்றத்தின் நிறுவுனர் குழந்தை செபமாலை தான் வாழும் காலத்திலேயே காண்பது உண்மையில் இவரின் கடின உழைப்பிற்கும், விடா முயற்சிக்கும், இடைவிடா இயக்கத்திற்கும், இறை நம்பிக்கைக்கும் கிடைத்த விலைமதிக்க முடியாத மிகப் பெரும் வெகுமதியாகவே தெரிகிறது.

### பொருளாதாரப் பின்னடைவுகள்

இக்காலத்தைப் போலல்லாமல் 1970களில் அதிலும் குறிப்பாக மாதோட்டம் போன்ற பிரதேசங்களில் எவ்வகையான தொண்டு நிறுவனங்களிடமிருந்தோ அல்லது பொது அமைப்புக்களிடமிருந்தோ உதவிகள் கிடைக்காத நிலையில் மன்றம் ஒன்று அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து செயற்பட்டதென்றால் அது உண்மையில் வியப்பிற்கும் மலைப்பிற்கும் உரியதே. இதுபற்றிக் விபரிக்கையில்: "எமக்குக் குறிப்பிடத்தக்க நிதி உதவி அளித்து எவராவது இன்றுவரை உதவிகள் செய்ய முன் வராத பொழுதிலும் நாம் அரசாங்க உதவியின்றியும், மக்களின் பொருள் உதவியின்றியும், எம் சொந்த செலவில் மன்றத்தை வளர்த்ததின் மூலம் இன்று பொருளாதார நிலையில் பின் தள்ளப்பட்டு நிற்கிறோம்" எனக் குறிப்பிடுகிறார் குழந்தை செபமாலை.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக மன்றத்தின் வரலாற்றில் மிகக் கஸ்ரமான மிகவும் நெருக்கடி நிறைந்த பல காலகட்டங்கள் இருந்திருக்கின்றன. குறிப்பாகப் பொருளாதார நெருக்கடிகளில் குழந்தை செபமாலை தன் சொந்த உழைப்பிலிருந்தும் தன் குடும்பத்தினரின் வருமானத்தில் இருந்தும் மன்றத்தின் பெரும்பாலான கலைப் பணிகளை மிக நீண்ட காலமாக ஆற்றி வந்திருக்கிறார். இம்மன்றத்தின் ஊடாக சாதித்தவை ஏராளமானவையாக இருப்பினும் அவற்றுக்கு நிறுவுனரும் அவர் குடும்பத்தவர்களும் கொடுத்த விலையும் மிக அதிகம். மெதடிஸ்த திருஅவையின் அருள்பணியாளர் ஜி.என். ஜெயராஜசிங்கம் அவர்களின் கூற்று மேற்சொன்ன கருத்துக்கு மேலும் வலுச்சேர்க்கிறது. "கலைஞர் குழந்தை அவர்கள் கலைத் தொண்டிற்காக இன்பம், சுகம், பணம், பொருள் யாவையும் தியாகம் செய்ததை அறிந்தவர்கள் ஒருசிலரே"

ஆயினும், 1990களின் பிற்பட்ட காலத்தில் முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் செயற்பாடுகளுக்கு நானாட்டான் பிரதேச செயலராகவிருந்த திரு. அ. பத்திநாதனின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அதுபற்றி குறிப்பிடுகையில், "இந்த வேளையில் பரிசு பெற்ற நாடகங்கள், "மாதோட்டம் கவிதைத் தொகுதி" ஆகிய இரண்டு நூல்களையும் வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வெளியீடு செய்துள்ள நானாட்டான் பிரதேச கலாசார பேரவைத் தலைவரும் நானாட்டான் பிரதேச செயலாளருமான திரு. அ. பத்திநாதன் அவர்களை நாம் மறக்க முடியாது. என்னுடைய ஆக்கங்கள் பிரபலம் அடைவதற்கு இவரே மூல காரணமாக இருந்தார் என்பதையும் இந்த வேளையில் குறிப்பிட்டே ஆகவேண்டும்" என குழந்தை செபமாலை குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

### பெற்ற பெறுபேறுகள்

இம்மன்றம் பல கலைஞர்களை, படைப்பாளிகளை, எழுத்தாளர்களை, நடிகர்களை, சுதேச நாடக நடன நெறியாளர்களை, பாடகர்களை, பல்கலைக்கழகப் பட்டதாரிகளை, ஆசிரியர்களை, இசைவாத்தியக் கலைஞர்களை, சமூக நலன்விரும்பிகளை, சமூக செயற்பாட்டாளர்களை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணியாளர்களை உருவாக்கி இருப்பது இதற்குச் சான்றாகும்.

இவர்கள் எல்லாருமே தாங்கள் வாழுகின்ற இடங்களில் - சூழலில் பலதரப்பட்ட கலைச் செயற்பாடுகளில் மிக ஆர்வத்தோடு ஈடுபட்டுக்கொண்டிருப்பது இம்மன்றத்தின் இயக்க சக்தி எத்தகைய தாக்கத்தை இவர்களில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும், இவர்களின் மூலமாக - இவர்களின் கலைப் படைப்புக்கள் மூலமாக இவர்கள் வாழும் - பணிசெய்யும் சமூகங்கள் பெறும் பலாபலன்கள் ஏராளம்.

இம்மன்றத்தின் ஆரம்பகால அங்கத்தவர்களான கலாபூசணம் செபஸ்தியான் மாசிலாமணி (பிலேந்திரன்) அவர்களும், கலாபூசணம் செபமாலை பிலிப்பு (சிங்கராசா) அவர்களும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் தொட்டிலில் வளர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் முறையே நானாட்டான் ஆவணத்தில் 'கார்மேல் அன்னை கலாமன்றம்', முருங்கன் இசைமாலைத்தாழ்வில் 'இசைமாலைத்தாழ்வு இயல் இசை நாடகமன்றம்' என்று தங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் கிராமங்களில் உள்ள கலைமன்றங்களை இயங்கி வருகிறார்கள்.

சிறப்பாகக் கலைத்தவசி குழந்தை செபமாலையின் இளைய சகோதரரான ஆளுனர் விருதுபெற்ற கலாபூசணம் செ.மாசிலாமணி (பிலேந்திரன்) முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் மூத்த முக்கிய கலைஞர்களுள் ஒருவராவார். பல கௌரவ விருதுகளைப் பெற்றவராகவும், நாட்டார் பாடல் கலைஞராகவும், பல்துறை விற்பன்னராகவும் விளங்கி மன்னார் மாதோட்ட நாட்டுக்கூத்துக் கலைவடிவத்தை இன்று மன்னார் மாதோட்டத்தில் மட்டுமல்லாது மாகாண, தேசிய ரீதியில் துலங்கச் செய்கிற பெருமகனாக மிளிர்வதும் மன்றத்தின் மேலுமொரு சாதனை என்றே கொள்ளவேண்டும்.

மேலும், முருங்கன் புனித யாகப்பர் ஆலய இளைஞர்கள் 'ஜேம்ஸ் இசைக்குழு' என்ற பெயரில் இசை நிகழ்ச்சிகளை 2009ஆம் ஆண்டு தொடக்கம் நடத்தி வருகிறார்கள்.

05 ஆண்டுகளுக்குள் முருங்கன், நானாட்டான், பேசாலை, பள்ளிமுனை, மன்னார் நகர், முல்லைத்தீவு, முழங்காவில் போன்ற இடங்களில் ஏறக்குறைய 10 தடவைகள் இசை நிகழ்ச்சிகளை நடத்தி பலரின் பாராட்டுக்களைப் பெற்று வளர்ந்து வருகிற உயிர்த்துடிப்புள்ள எம் மன்றத்தின் இளையோர்கள் ஆவர்.

அவ்வகையில் தாய் மன்றமாகிய 'முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்' தன் தொடர் இயக்கத்தினால் சேய்க் கலை, இசைக் குழுக்களை முகிழச் செய்திருப்பது இம்மன்ற வளர்ச்சியின் இன்னுமொரு மைல் கல்லாகவே கொள்ளப்படவேண்டும்.

தொடரும்...

வண.செ.அன்புராசா,
இயக்குநர், அன்னை இல்லம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடக தினம் 2021



2020 மார்ச் மாதத்தில் இலங்கையில் கொரனா பாதிப்பு பரவலடையத் தொடங்கிய முக்கியமான காலமாகும். ஆக்காலப்பகுதியில் உலகநாடக தினத்தை முன்னிட்டு நாட்டில் பல இடங்களிலும் அரங்க நிகழ்வுகள் நாடக ஆற்றுகைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதனோர் முக்கிய அங்கமாக யாழ்ப்பாணத்தில் மாவட்டக் கலாச்சாரப் பேரவை பல்வேறு நாடக ஆற்றுகையை உள்ளடக்கி பெரும் எடுப்பான ஓர் நாடக விழாவை ஏற்பாடு செய்திருந்தது. விழாவிற்கான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது வரை முக்கால்வாசி ஏற்பாடுகள் நிறைவடைந்த நிலையில் கலைஞர்கள் சக ஏற்பாட்டாளர்கள் ரசிகர்கள் என அனைவருக்கும் ஏமாற்றம் தரும் வகையில் நோய்த்தொற்றுப் பரவல் தீவரம் காரணமாக விழா சடுதியாக நிறுத்தப்பட்டது.

2021 இம்முறை உலக நாடக தினமான மார்ச் 27 மீண்டும் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கொரனாத் தொற்று அதிகரிக்க தொடங்கிய நிலையில் உலக நாடக தினத்தை சந்திக்க வேண்டிய இக்கட்டான சூழல் நாடகர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஏற்பட்டது. சுகாதார நடைமுறைகளைக் கவனத்தில் கொண்டு சிறிய அளவிலாவது நாடக விழாவை நடாத்தி நாடகக் கலைஞர்களுக்கு ஓர் ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற நிலை உணரப்பட்டது. வழமையாக இவ்வாறான நாடக விழாக்களை ஏற்பாடு செய்வதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பெரும் கலாச்சாரப் பண்பாட்டு அமைப்புக்கள் தொகையான நிதிச் செலவுகளோடு ஏற்பாடு செய்வது வழமை.

இந்நிலைக்கு முற்றிலும் மாறாக இம்முறை உலக நாடக தினத்தை உள் ஊர் நாடக அமைப்புக்கள், அரங்கக் கலைஞர்கள், தன்னார்வக் கலைத் தொண்டர்கள் என அனைவரும் இணைந்ததான ஓர் எளிமையான நாடக விழாவாக செம்முகம் ஆற்றுகைக் குழுவும் ஆரோகணா அரங்கக் கல்லூரியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.


"ஊருடன் கூடி அரங்காடு மானிடம் மான்புற" எனும் தொனியோடு மார்ச் 26 தெல்லிப்பளை கலாச்சார மத்திய நிலையத்தில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் சீலனின் நெறியாளுகையில் சிமாகாவின் "கனிந்த இரவு" குறு நாடகமும், ஆரோகணா அரங்கக் கல்லூரியின் ஆயூரனின் பிரியாவிற்கு ஓர் கடிதம் என்கின்ற சிறுவர் நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டன.

நாடக விழாவின் தொடர்ச்சியாக உலக நாடக தினமான மறுநாள் மார்ச் 27 ஆரோகணா அரங்கக் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் எழுச்சி பூர்வமாக நாடக விழா முன்னெடுக்கப்பட்டது. விருந்தினர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலகர்களின் மங்கல ஒளியேற்றலுடன் விழா ஆரம்பமானது. முக்கிய அம்சமாக கொழும்பு மக்கள் களரி நாடக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்றத்தின் இயக்குநரும் இலங்கையின் முக்கிய நாடகச் செயற்பாட்டாளருமான பாராக்கிரம கிரியல்ல அவர்கள் கலந்துகொண்டிருந்தார்.

இந்நாடக விழாவின் சிறப்பம்சமாக பல்வகையான நாடககங்கள் மேடையேற்றப்பட்டமை, பார்வையாளரின் ரசனைக்கும் ஆர்வத்திற்கும் ஏதுவாக அமைந்தது. இணுவில் இளந்தொண்டர் சபையின் நந்தனார் இசைநாடகம், கொழும்பு அரங்காடிகளின் நாடகக் கூடத்தின் இப்படி ஒரு நாள் குறுநாடகமும், சண் நாடக்குழுவின் தலையெழுத்து குறுநாடகமும் நிகழ்வின் இறுதி ஆற்றுகையாக ஆரோகணா அரங்கக் கல்லூரியின் பிரியாவிற்கு ஓர் கடிதம் உட்பட நான்கு நடகங்கள் மேடை ஏற்றப்பட்டு பார்வையாளாகளின் ஏகோபித்த வரவேற்பை தனதாக்கிக் கொண்டது.

நடாகம் ஒரு கூட்டுக் கலையென அறியப்படுகின்றது. இதில் பன்மைத்துவ கலைஞர்களின் கூட்டிணைவு மாத்திரமன்றி சமூகத்தின் கூட்டாகவும் சமூக சமத்துவத்தின் வெளிப்பாடாகவும் அமைதலே நிறைவானது.

எல்லாவற்றுக்கும் மேலாக நாடகம் என்பது ஓர் இயங்கியல் ஆகும். எனவே கடந்தகால பழம் பெருமைகளையும் வரலாறுகளையும் துறைசார் தனிமனித புகழ்பாடலை மட்டுமே மேற்கொண்டிருப்பதால் இயங்கியலுக்கு முரணான தேக்க நிலை ஏற்படும். இவ்வாறு ஊர்கூடி தமக்கு இயன்ற பங்கையாற்றி ஏனையோரது தனித்துவப் பண்புகளை ஏற்று கலைஞர்கள் கூட்டிணைந்து அரங்கப் பண்பாட்டை முன்னெடுக்கும்போது கலைஞர்களுக்கு ஓர் உந்துதலும் நாடகத்திற்கு புத்துணர்வும் கிடைக்கின்றது.

மொத்தத்தில், நாடகவிழா ஒருசில பலவீனங்களைத் தன்னில் கொண்டிருப்பினும் அதில் பங்குபற்றிய ஒவ்வொரு கலைஞர்களினதும் பார்வையாளார்களினதும் உளப்பகிர்வு, உணர்வு வெளிப்பாடும் இவ்விழாவிற்கு புள்ளி வைத்து தொடங்கியவர்களுக்கும் தொடர்ந்து இயங்க வேண்டும் என்ற தன்னார்வக் கலைஞர்களுக்கும் நிறைவைத் தந்துள்ளது எனக் கூறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்வுகள்

கர்நாடக இசை மும்மூர்த்திகளுள் ஒருவரான அருள்மிரு தியாகராஜ சுவாமிகளின் **174** வது நினைவு ஆராதனை நிகழ்வு **01.02.2021** அன்று யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையில் துறைத் தலைவர் செல்வி பரமேஸ்வரி கணேசன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இப் பஞ்சரத்தின ஆராதனை நிகழ்வில் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருடன் யாழ்ப்பாணத்தின் இசைக் கலைஞர்கள், மங்கல இசையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ச.சிறீசற்குணராசா, கலைப்பீடாதிபதி கே.சுதாகர், முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிழக்குப் பல்கலைக் கழகம், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக இசைத்துறையின் ஏற்பாட்டில் அருள்மிகு தியாகராஜ சுவாமிகளின் நினைவாராதனை நிகழ்வு **16.03.2021** அன்று துறைத் தலைவர் கலாநிதி தெ.பிரதீபன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி பாரதி கெனடி, முகாமைத்துவச் சபை உறுப்பிளர் பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். மாணவர்கள், விரிவுரையாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபக தினம் **01.03.2021** அன்று கலாமன்றத்தின் தலைவர் ந.சோதிநாதன் அவர்களின் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவ, இசையாசிரியர் செல்வி சந்திக்கா கணேஸ்பரன் ஆகியோர் "சிதம்பர ஜோதி" எனும் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். தொடர்ந்து பொன்சக்தி கலாகேந்திரா நடனப் பள்ளியின் நாட்டியாஞ்சலி நிகழ்வும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் தலைமையிலான பட்டிமன்றமும் இடம்பெற்றன.

மிருதங்கஞானவாரி திரு.சி.துரைராசா அவர்களின் "நல்லைக் குருசேத்திரம்" நுண்கலைப் பயிலகத்தின் ஏற்பாட்டில் **02.02.2021** அன்று யாழ்.இந்துசமயப் பேரவையில் அருள்மிகு தியாகராஜ சுவாமிகளின் நினைவு ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர், அரசியல் தலைவர்கள், இசை ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தியாகராஜ சுாமிகளின் வகுளபஞ்சமி திதியில் இந்நிகழ்வு நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்

யாழ்ப்பாணம், காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அருள்மிகு தியாகராஜர் ஆராதனை **02.02.2021** அன்று கலாமன்றத்தின் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. நல்லை க.கண்ணதாஸ் அவர்களின் தொடக்க உரையுடன் தொடங்கிய இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், இசையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பஞ்சரத்தின ஆராதனையுடன் தனியிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் முன்னெடுப்பில் "கலசம்" என்னும் பெயரிலான தொடர் கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆடல், இசை, நாடக நிகழ்வுகள் கொண்டதாக மார்ச் **17,23**, ஆகிய திகதிகளில் மாலை நிகழ்வுகளாக இந்நிகழ்வுகள் சிறப்புற நிகழ்த்தப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வாறான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக் கழகம், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் நடன, நாடகத் துறையின் ஏற்பாட்டில் உலக நாடக தினம் 30.03.2021 அன்று மாலை நான்கு மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக நடன நாடகத்துறை நடாத்தும்

## உலக நாடகதின விழா 2021

நிகழ்வன

- ஒளியேற்றல்
- வரவேற்புரை – திருமதி உமா சிறிசங்கர்
  சிரேஸ்ட விரிவுரையாளர், நடன, நாடகத்துறை
- **உலக நாடகச் செய்தி** – கலாநிதி ஜெயரஞ்ஜினி ஞானதாஸ்
  தலைவர், நடன, நாடகத்துறை
- கவி ஆற்றுகை – திரு க.மோகனதாசன்
  சிரேஸ்ட விரிவுரையாளர், நடன, நாடகத்துறை
- "அக்கினிக்குஞ்சு" இசையும் அசைவும் – தற்காலிக உதவி விரிவுரையாளர்கள்
  நடன, நாடகத்துறை
- **பிரதம விருந்தினர் உரை** – கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி,
  பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம்
- கூத்தரங்க ஆற்றுகை – திருமதி. உமா சிறிசங்கர்
  சிரேஸ்ட விரிவுரையாளர், நடன, நாடகத்துறை
- ஆற்றுகை "மனவெளி" – கலாநிதி ஜெயரஞ்ஜினி ஞானதாஸ்
  தலைவர் நடன, நாடகத்துறை
- "துணி"அரங்க ஆற்றுகை – திரு. தி.தர்மலிங்கம்
  விரிவுரையாளர், நடன, நாடகத்துறை
- தெருவெளி அரங்கு – திரு. அ.விமலராஜ்
  விரிவுரையாளர், நடன, நாடகத்துறை
- நன்றியுரை – சீ.சர்மிளா
  தற்காலிக உதவி விரிவுரையாளர், நடன, நாடகத்துறை

30 மார்ச் 2021
நேரம் – பி.ப. 4.00 மணிக்கு
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்.

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்***

---



## ஈழத்து மிருதங்கக் கலை வரலாறு


யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையின் மிருதங்க விரிவுரையாளர் திரு. நல்லை க.கண்ணதாஸ் அவர்களின் "ஈழத்து மிருதங்கக் கலை வரலாறு" எனும் தொடர் கட்டுரை ஆயகலையின் மூன்றாவது இதழில் வெளிவர உள்ளது. முப்பத்தைந்து தாளங்ளில் தனியாவர்த்தனம், பஞ்ச கதிகள் போன்ற நூல்களின் ஆசிரியரான திரு க.கண்ணதாஸ் அவர்கள் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுத விழா

கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களின் அமுத விழா 27.02.2021 அன்று மாலை யாழ். கலைத்தூது கலையரங்கில் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றத்தின் ஏற்பாட்டில் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் துறைசார்ந்த பலரின் வாழ்த்துரைகளும் இசையரங்கும் இடம் பெற்றது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தின் ஆடற்கலை வரலாற்றில் சாதனைக் கலைஞராக திரு.வேல் ஆனந்தன் அவர்கள் பணியாற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே.




அன்பான வாசகர்களே
நீங்கள் வழங்கி வருகின்ற
ஆதரவுக்கு நன்றி. அழகியற்
கலைகள் அனைத்திற்குமான
இதழாக "ஆயகலை" தொடர்ந்து
வெளிவரும். நீங்களும் எழுத்தாளர்
ஆகுங்கள். துறைசார்ந்த
கட்டுரைகள், கவிதைகள், செய்திகள்,
புகைப்படங்கள் போன்றவற்றை
அனுப்புங்கள். தரமானவை நிச்சயம்
அச்சுவாகனமேறும்.
நன்றி
ஆசிரியர், ஆயகலை

## நூல் வெளியீடு



ஈழத்தின் புகழ் பெற்ற எழுத்தாளரும் முன்னாள் போராளியும் சமூக சேவகியுமான வெற்றிச் செல்வி அவர்களால் தொகுக்கப்பட்ட "பங்கர்" (பதுங்கு குழி) எனும் நூல் 07.02.2021 அன்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் "எங்கட புத்தகங்கள்" செயல்த் திட்டத்தினரால் வெளியிடப்பட்டது. 26 எழுத்தாளர்களால் எழுதப்பட்ட 30 சரித்திரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. ஈழத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் இந்நூல் பெரு வரவேற்பைப் பெற்றுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆயகலையின் வெளியீடு



ஆயகலையின் முதலாவது இதழ் 03.02.2021 அன்று, ஈழத்தின் சரித்திர எழுத்தாளர் நா.யோகேந்திரநாதன் அவர்களின் இல்லத்தில் எளிமையான முறையில் வெளியீடு செய்யப்பட்டது. அன்று காலை சந்நிதி முருகன் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு, எங்கட புத்தகங்கள் செயல்த்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் கு.வசீகரன், ஆங்கில விரிவுரையாளர் எல். ரமணன், புதுமை படைப்பகத்தின் இயக்குநர் சி.ரமணரகு ஆகியோரின் கூட்டிணைவில் இவ் வெளியீடு எளிமையான முறையில் நிகழ்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org